Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 11 வியாழக்கிழமை (27.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

### சம்பந்தனுக்கு சுகவீனம்
## கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளதால் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுக் காலத்தின் பின்னர் கூடவிருந்த 23

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம்
#### 9 மணி நேர வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பில் அமைந்துள்ள இல்லத்திற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக் 23

### மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுங்கள்
## அமைச்சுக்கான செயலாளர்களுக்கு ஜனாதிபதி கோட்டா ஆலோசனை

(கொழும்பு)

மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுங்கள். மக்களுக்கு விரைவில் பிரதிபலன்களைப் பெற்றுக் கொடுப்பதே தற்போதைய தேவையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுக்கான செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

35 இராஜாங்க அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களுக்கு நியமனக் 23


### நேற்று மட்டும் 13 கொரோனா தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கைக்குள் நேற்று மாத்திரம் 13 கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர்.

பொலநறுவை கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் 10 பேர் கென்யாவில் இருந்து வந்த 24

### வன்முறை இல்லாமல் போராட நிறைய உண்டு
# தமிழர்கள் சுய ஆட்சி பெற நீண்ட தூரம் செல்ல வேண்டும்



## நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்

*(கொழும்பு)*

இலங்கையில் தமிழ் மக்கள் சுய ஆட்சி பெற மற்றும் சிறுபான்மையினருக்கான உரிமைகளை நிறுவ இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

மேலும் வன்முறை இல்லாமல் போராட நிறைய உண்டு என்றும் சுட்டிக் காட்டினார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

### மாகாண சபையால் பலனுண்டா? ஆராய குழு

(கொழும்பு)

மாகாண சபை முறைமையினால் கிடைத்த சாதகமான பெறுபேறுகளை ஆராய குழுவொன்றை அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

1988ஆம் ஆண்டு மாகாண 24

## இடைக்கால கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்
#### பாராளுமன்றில் இன்றும் நாளையும் விவாதம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட நான்கு மாத காலத்திற்கான இடைக்கால கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அங்காரம் வழங்கியுள்ளது.

இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான இரு நாள் பாராளுமன்ற விவாதம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத் 23

## இலங்கையுடனான உறவை வலுப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் ஆர்வம்
#### பிரதமர் மகிந்தவிடம் பிரித்தானிய பதில் உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய பதில் உயர்ஸ்தானிகர் லிசா வன்ஸ்டல் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியபோதே பதில் உயர்ஸ்தானிக



23

### தமிழரின் தொன்மை தொடர்பாக
## சிங்கள மக்களுக்கு பிழையான தகவல்கள் சொல்லப்பட்டுள்ளன
#### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் தொன்மை தொடர்பான பிழையான தகவல்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.


உண்மையை சிங்கள மக்கள மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அதனாலேயே பாராளுமன்றத்தில் உண்மையைக் கூறினேன். உண்மையைக் கூறுவதற்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 24

## முழுமையாக அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்க
#### எல்லே குணவங்ச தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

சிங்கள பௌத்த வாக்குகளாலேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்கு கிடைத்தது.

பகுதி பகுதியாக அரசியலமைப்புத் திருததங்களை மேற்கொளளாது முழுமையாக அரசி 24



### கசிப்பு உற்பத்தி துன்னாலையில் குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக, துன்னாலை பகுதியில், நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குடும் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**கிளிநொச்சி வளாகத்தின் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்துவதற்கான**

கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பின்வரும் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி வளாகப் பொது நிருவாகக் கிளையில் 11.09.2020 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. விவசாய பீட சிற்றுண்டிச்சாலை
2. விவசாய பீட புதிய சிற்றுண்டிச்சாலை
3. பொறியியல் பீட சிற்றுண்டிச்சாலை
4. தொழிநுட்ப பீட சிற்றுண்டிச்சாலை
5. ஆண்கள் விடுதிச் சிற்றுண்டிச்சாலை

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இரண்டாயிரமும் (2000.00), மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500.00) தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை அறிவியல்நகர் பொதுநிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கப்படும் சிற்றுண்டிச்சாலையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சிற்றுண்டிச்சாலைகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகரில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் பொது நிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம்: 021-2060180.

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-157)

# பொன். சிவகுமாரனின் 70 ஆவது பிறந்த தினம்

## உரும்பிராயில் நினைவு கூரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஈழ விடுதலை போராட்டத்தின் முதலாவது வித்து பொன்.சிவகுமாரனின் 70 ஆவது பிறந்த தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.

சிவகுமாரன் நினைவுதின ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் நேற்று காலை 8.30 மணிக்கு உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சிவகுமாரனின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சிவகுமாரனுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (ம-8)




# புத்தள மீனவர்களின் படகுகள் வடமராட்சியில் மீட்பு


புத்தளத்திலிருந்து வந்து வடமராட்சி கடற்பரப்பில் சட்டத்துக்குப் புறம்பானமுறையில் கடற் தொழிலில் ஈடுபட்ட 3 படகுகள் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் அதிகாரிகளால் மீட்கப்பட்டன.

எனினும் தொழிலில் ஈடுபட்டவர்கள் படகுகளைக் கரையில் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நாகர்கோவில் கடற்பரப்பில் நேற்று இரவு இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்டத்துக்குப் புறம்பாக தென்னிலங்கை மீனவர்கள் தொழில் ஈடுபடுவதாக அண்மைக் காலமாக குற்றஞ்சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 – 04 – 1935



மறைவு 26 – 08 – 2020

## துரைச்சாமி லோகநாதன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி லோகநாதன் அவர்கள் நேற்று (26.08.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சிவகாமி அம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் தர்சினி, சுஜந்தன், சுகீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மினியின் பாசமிகு மாமனாரும் றிதிக்சனின் பேரனும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், அருணாசலம், சரவணமுத்து, இரங்கநாதன், சோமசுந்தரம், அன்னரத்தினம், செல்வரத்தினம் மற்றும் நமசிவாயம், கனகசுந்தரம், இராஜதுரை, புவனேஸ்வரி, சுலோஜனாதேவி, யோகேஸ்வரி, கமலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2020) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3704)

இல. 42, மாவடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

077 759 7442

தகவல்:-
குடும்பத்தினர்

**Faculty of Management Studies & Commerce**
**University of Jaffna – Sri Lanka**
**Commencement of Academic Activities**

The 1st year, 2nd year, 3rd year and 4th year batches of students of Faculty of Management Studies & Commerce are hereby informed that the normal academic activities will commence on **02.09.2020 (Wednesday)**. All batch students are expected to be present and attend the lectures and other academic activities from that day onwards. Students those who are given hostel accommodation should report to respective hostels from **01.09.2020 (Tuesday)**.

- The 2nd year 2nd semester and 3rd year 2nd semester (Academic Year - 2017/2018) lectures will be held at **faculty new premises** located at **10th Lane, Kalasalai Road, Thirunelveli.**
- 1st year 1st semester & 2nd year 1st semester (Academic Year - 2018/2019) lectures will be held at **usual place (Main Premises).**

**The Registrar,**
**University of Jaffna.**
**26.08.2020**

(C-152)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆங்கிலபாட ஆசிரியர்
**திரு. அல்றின்குறூஸ்** அவர்களின்
அன்புச் சகோதரன்

## திரு. சின்னராசா அல்ரர்போல்

தோற்றம் – 11.05.1978
மறைவு – 25.08.2020

அவர்களின் மறைவை எண்ணி
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3701)

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**யா/இணுவில் மத்திய கல்லூரி.**

# இந்தியாவை பகைத்து இலங்கை தன்னிச்சையாக செயற்படக்கூடாது

# எவ்வித அதிகார குறைப்புமின்றி 13 வது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



(கொழும்பு)

**இந்தியாவை பகைத்துக்கொண்டு 13 ஆவது திருத்தத்தை நீக்கினால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும் . எனவே எவ்வித அதிகார குறைப்பும் இன்றி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த கூட்டணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைக் கூறினார்.

“இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கையில் மாகாணசபை முறைமையை உருவாக்குவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனவே, இது விடயத்தில் இலங்கையில் தன்னிச்சையாக செயற்பட முடியாது. குறிப்பாக இந்தியாவை பகைத்துக் கொண்டு இதனை நீக்கினால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது 13 பிளஸ் எனக்கூறினார். இன்று கூட அவரோ அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ 13 ஐ நீக்குவது தொடர்பில் கருத்து வெளியிடவில்லை. தமது வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்வதற்காகவே 13 நீக்கப்பட வேண்டும் என சிலர் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாட்டில் ஏனைய 7 மாகாணங்களிலும் மாகாண சபைகள் இயங்கின. முதல்வர்கள் தெரிவானார்கள். எனவே. மாகாணசபை முறைமையை பலப்படுத்த வேண்டுமே தவிர அதனை பலவீனப்படுத்தக் கூடாது. எவ்வித அதிகார குறைப்பும் இன்றி 13 முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இம்மூன்று கட்சிகளும் இணைந்து பயணித்தாலேயே எமக்கான பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. எனவே, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (2-7)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு முழு ஆதரவு

## இலங்கை தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இன விடுதலைப் போரின் காலத்தில் தம் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உண்மையைக் கண்டறியாமல் துன்பத்தோடும் துயரத்தோடும் ஜனநாயக வழிகளில் நீதிகோரிப் பல ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளோடு நாமும் நீதி கோரி நிற்போம், செயற்படுவோம் என இலங்கை தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை இந் நாட்டில் இடம் பெற்ற பல தமிழினத்திற்கு எதிரான இனக் கலவர காலங்களில் ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டது மட்டுமல்ல காணாமலும் ஆக்கப்பட்டனர்.

1972 - 1973 முதல் தமிழ் மக்களுக்கெதிரான இலங்கை இராணுவ அடக்கு ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஆரம்பித்த ஆயுதப் போராட்ட காலத்திலும் 2009 கால்பகுதியில் போர் தீவிரமடைந்திருந்த வேளை அரசும், இராணுவமும் போருக்குள் அகப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வாருங்களென அழைத்தனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அரசிடமும், சர்வதேசத்திடமும் நீதி கோரி நிற்கின்றனர்.

இதற்கு 2012 இலும் 2015 இலும் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வலுவாகவுள்ளன.

அரசும் சர்வதேசமும் பதில் சொல்லும் கடப்பாட்டை நிறைவேற்ற வலியுறுத்தியும் நம்பகத் தன்மை வாய்ந்த நியாயம், நீதியையும் மக்கள் கோருவதற்கு நாமனைவரும் அப் போராட்டங்களுடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டுமென்றும் கோருகின்றோம். (ஜ-2)

# அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறை தொடர்பில் ஜனாதிபதி திட்டம்

- மண்சரிவு பிரதேசங்களில் கித்துள் பயிர்ச் செய்கை
- பனை மரங்களை வெட்டுவதை தடுப்பதற்கான கடுமையான சட்டம்
- இரண்டு மில்லியன் வீட்டுத் தோட்டங்களுக்கு 4 மில்லியன் தென்னங்கன்றுகள்
- பள்ளமான பிரதேசங்களில் பைனஸ் மரத்திற்கு பதிலாக இறப்பர்



(கொழும்பு)

கித்துள் மற்றும் பனையை பிரதான ஏற்றுமதிப் பயிர்களுடன் சேர்த்து அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறை ஒன்றை ஆரம்பிப்பதற்கான இயலுமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கித்துள் மற்றும் பனைப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றுக்கான தடைகளை நீக்கி உற்பத்தி செயற்பாட்டை ஊக்கப்படுத்துவதற்கும் உடனடியான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதன் அவசியத்தை ஜனாதிபதி அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

கித்துள் பயிருக்காக அரச நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் பனை மரம் வெட்டுவதைத் தடை செய்யும் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக் காட்டினார்.

அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ள இராஜாங்க அமைச்சாக இவ்வமைச்சின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி குறுகிய காலத்தில் அடைந்துகொள்ள வேண்டிய இலக்கை தயார் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். வருடாந்த உள்நாட்டு தேங்காய் உற்பத்தி 3 பில்லியன்களாகும். அதில் 1.8 பில்லியன்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிக ஏற்றுமதிக்காகப் பயிரிடுவதை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட இனங்காணப்பட்டுள்ள காணிகளில் உடனடியாக தென்னைப் பயிச் செய்கையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. காணி பயன்படுத்தல் திணைக்களத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ள கைவிடப்பட்ட வயல் நிலங்களும் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படும். செப்டெம்பர் மாதத்தில் 2 மில்லியன் வீட்டுத் தோட்டங்களுக்கு 4 மில்லியன் தென்னங்கன்றுகளை பயிரிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ர்ராஜபக்ஷ தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறப்பர் ஏற்றுமதியினால் வருடாந்தம் பெறும் வருமானம் 600 மில்லியன் டொலர்களாகும். அதனை 2020 ஆம்ஆண்டில் 2000 மில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இறப்பர் பயிர்ச் செய்கையில் புதிய இனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் பள்ளமான பிரதேசங்களில் பைனஸ் மரத்திற்கு பதிலாக இறப்பர் மரங்களை பயிரிடுதல் தொடர்பாக ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அமைச்சர் ரமேஸ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர உள்ளிட்ட அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பயிர்ச் செய்கை, உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஜ-4)

# சட்டவிரோதமாக நுழைபவர்களால் கொரோனா பரவும் அபாயம்



(கொழும்பு)


**இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் இலங்கைக்குள் சட்டவிரோதமாக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொற்று நோய் பிரிவு எச்சரித்துள்ளது.**

இதன் காரணமாக கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து அதிகமாகவுள்ளதாக அந்தப் பிரிவின் பிரதம அதிகாரி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் கடும் ரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கைக்குள் வருபவர்களில் ஒருவராவது கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதனால் இலங்கைச் சமூகத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ஆரோக்கியமான வாழ்வுக்கு தீங்கு விளைவிக்காத பர்கர்



(கொழும்பு)

தொற்று அல்லாத நோய்களால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. உடனடியாக தயாரிக்கப்படும் துரித உணவுகளை உண்ணும் பழக்கமே இதற்கு காரணம் என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் ஆரோக்கியமான உணவு வகைகளை தேடி உண்பது சிரமமான இக்காலத்தில் ஆரோக்கியமான மாற்று உணவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் சிலர் கண்டு பிடித்துள்ளனர். பலாக்காய் பிஞ்சு (பொலஸ்) மற்றும் காளான் சேர்த்து விஷமற்ற பர்கர் உணவை அவர்கள் தயாரித்துள்ளனர்.

பர்க்கருக்கான பணிஸ் குரக்கன் மாவில் தயாரிக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். உடனடி உணவு வகைகளை விரும்பும் நபர்களின் உடலுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காத இந்த புதிய பர்கர் உணவை கேட்கும் அளவுக்கு தயாரித்து வழங்க முடியுமென மாணவர்கள் கூறியுள்ளனர். (ஜ-4)

## பாராளுமன்ற தகவல் திரட்டு சஞ்சிகை வெளியீடு



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தயாரித்த முதலாவது சஞ்சிகையான 'பாராளுமன்ற தகவல் திரட்டு" 9ஆவது பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. (ஜ-4)


## பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் சேவையை பிரதானமாகக் கொள்ள வேண்டும் - சபாநாயகர்

(கொழும்ப)

உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் சேவையை பிரதானமாகக் கொள்ள வேண்டும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "பல வருடங்களுக்கு பின்னர், இன்று இலங்கையில் முழுமையானதொரு பாராளுமன்றமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



இதற்காக, நாம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தோம். இவை அனைத்தையும் எமக்கான ஒரு பாடமாகத்தான் கருதுகிறோம்.

இலங்கையில் தற்போது காணப்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பில்தான் இந்த பாராளுமன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக புதிய அரசியலமைப் பொன்று இன்று நாட்டுக்கு தேவைப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஒரு நாட்டில் இதயமாகக் கருதப்படும் பாராளுமன்றில், எதிர்காலத்தில் எந்தவொரு தவறும் இருந்துவிடக்கூடாது என்றுதான் நாம் இந்த செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளோம். மக்களுக்கு சேவையாற்றக்கூடிய மக்கள் பிரதிநிதியாக அனைவரும் திகழ வேண்டும்" என தெரிவித்தார். (ஜ-4)

## துணைப் பிரதமர் பதவி இல்லை வதந்திகளை நம்ப வேண்டாம்

(கொழும்பு)

துணைப் பிரதமர் பதவி தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் வதந்திகளை மறுப்பதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துத்தெரிவித்த அவர், துணைப் பிரதமர் என்ற தலைப்பு ஊடகங்களால் புனையப்பட்ட ஒன்று என்றும் தற்போதைய அரசாங்கத்தில் அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்றும் உறுதியளிப்பதாக கூறினார்.

ஊடகங்கள் வதந்திகளை பரப்பிவிட்டு பின்னர் அவற்றினை உண்மை அறிக்கைகளாக மாற்ற தங்களை கேள்வி கேட்க முடிவு செய்கின்றன என்றும் குற்றம்சாட்டினார்.

மேலும் தாங்கள் தற்போது அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்தே அவதானம் செலுத்தி வருவதாகவும் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என்றும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)



# இராசிபலன்

**27.08.2020**
**ஆவணி 11, வியாழக்கிழமை**
**நவமி பிற்பகல் 01.14 மணிவரை**
**கேட்டை பிற்பகல் 4.51 மணிவரை**
**சுபநேரம் 7.35-9.05 மணிவரை**
**இராகுகாலம் 01.35-3.05 மணிவரை**
**சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை**

**வளவன்**

**மேஷம்**: எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**: நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.

**மிதுனம்**: சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, வீட்டுப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்**: கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், செய்தொழில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்**: போசன சுகமுண்டு, நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**: உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.

**துலாம்**: வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**: ஆழ்ந்த சிந்தனையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், கௌரவமான நாள்.

**தனுசு**: வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, தேக நலனில் சிறு இடையூறுகள் ஏற்படலாம், ஊர் மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**: வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இலாபகரமான நாள்.

**கும்பம்**: வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்**: மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**உன் உணர்வு உன் அறிவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கட்டும்**

# குணமடைந்தோர் 2819

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 819 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மேலும் 3 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 971 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அதில் 152 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை 62 பேர் தற்போது சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திருமதி இராசவரஉதயம் சுதாஜினி

திதி: 27.08.2020

| உறவில் தளிராக | உறவின் நினைவாக |
|---|---|
| 17.09.1970 | 07.09.2019 |

ஈரைந்து திங்கள் எம் கரு சுமந்த கடவுளை
இப் பாரிலே என் உறவின்
பாதியாய் ஆனவளை யார் வந்து
பிரித்தாரோ–உனை யௌவனத்தில்
பறித்தாரோ பூமுகப் பொட்டழகும்
பூரித்த சிரிப்பழகும் சாமிக்கும்
பொறுக்கவில்லை உன்னை
சடுதியிலே பறித்ததுவோ வாசலிலே
தேடுகின்றோம்–உன் வருகைக்குத்
தவமிருந்தோம் ஆண்டொன்று
ஆனதம்மா அவனியிலே உனைப் பிரிந்து
பெற்றவளும் கொற்றவனும் – நீ பெற்றெடுத்தோர்
சோதரரும் உற்றவரும் உனைத்தேடி உருகிநிதம்
வாடுகின்ற பற்றதனை நீ அறுத்துப் பாதியிலே
போயினையோ! நற்றவளே நானிலத்தில் நான்
கொண்ட துயர்மீள உற்ற உன் திருமுகத்தை
ஒருமுறை தான் காட்டிவிடு..
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணா வீதி
அச்சுவேலி.

குடும்பத்தினர். (ஜ-128)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 11.02.2005

உதிர்வு 25.08.2020

செல்வி
**திவ்வியா சரவணபவன்**

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
**திரு. முருகையா சரவணபவன்** (இணுவில்)
அவர்களின் அன்புப் புதல்வியின்
மறைவால் துயரடைந்துள்ள
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யாழ்/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்,
காங்கேசன்துறை.

(3692)

# மரண அறிவித்தல்



## திருமதி.தங்கமுத்து கந்தசாமி

பிறப்பு: 16.06.1930 இறப்பு: 13.08.2020

யாழ்.கரவெட்டி,கோவில் சந்தையடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட தங்கமுத்து கந்தசாமி அவர்கள் 13.08.2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற முருகுப் பிள்ளை, முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புத்திரியும், பொன்னம்பலம் கந்தசாமி (அதிபர் - ஸ்கந்தபுரம் வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், மனோகரன், மகேந்திரன், சிவமதி, சிவமலர், சிவானந்தன், காலஞ்சென்ற மனோகரி, சிவசுதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சரஸ்வதி-பொன்னையா, பரமேஸ்வரி-சிவராசா, மகேஸ்வரி-சிவசுப்பிரமணியம், நித்தியானந்தம் ஆகியோரின் சகோதரியும், ஜெயவதி, ராசமலர், தவச்செல்வம், மகேந்திரராசா, ஷாந்தினி, வீணா, ஸ்டெப்னி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயந்தன், தானியா, லவன், ரதீஷன், சதீஷன், கலைமதி, சுகந்தன், சுதர்சன், சுரேசன், சுபாங்கன், மலர்வேணி, ஆதவன், நவீன், யுகானா, லோகேஷ், கோகுலன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 27.08.2020 இன்று பகல் லண்டன் நேரப்படி 10.00 a.m-11.30 a.m . 51 Waddon Road,Crydon இல்லத்தில் நடைபெற்று Crydon மயானத்தில் தகனம் செய்யப்படும். அதேநேரம் இலங்கை நேரப்படி, அவர் பிறந்த கோவிற் சந்தையடி வீட்டில் அவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"ஸ்கந்தபதி"
கோவிற் சந்தையடி, கரவெட்டி.

(3676)

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்கள் எதிர்கொள்ளும் தேவையற்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



கொரோனா அச்சுறுத்தல் காலப் பகுதியில் தாம் அர்ப்பணிப்புடன் சேவையில் ஈடுபட்ட போதும் தொழிற்சங்கமொன்று தம்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாக குற்றம் சாட்டியே குறித்த போராட்டம் நடத்தப்பட்டது.

தம் மீதான குற்றச்சாட்டுக்களைக் கண்டித்தும், நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியும் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் "தொழிற்சங்கம் மன்னிப்புக் கோர வேண்டும் அல்லது நிரூபிக்க வேண்டும்", "தனிநபர் பிரச்சினைகளுக்கு சுயாதீன விசாரணை வேண்டும்" உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை காட்சிப்படுத்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர். (5-4-18-26)

# பொலித்தீன் பாவனை 'கட்'

(குப்பிழான்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சந்தைகள், இறைச்சிக். கடைகள், உணவகங்களில் பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பொலித்தீன் பாவனையற்ற நகரத்தை உருவாக்கும் நோக்கில் குறித்த தடை அமுலுக்கு வரவுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றது. இவ் அமர்வில் யாழ்.மாநகர சபையின் முதல்



வர் முன்வைத்த தீர்மானம் சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதையடுத்து மேற்படி தீர்மானம் அமுல்படுத்தப்படவுள்ளது.

குறித்த தீர்மானத்துக்கமைய முதற்கட்டமாக யாழ். மாநகர சபைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், உணவகங்களில் பொலித்தீன் பாவனைகளை தடை செய்வது எனவும், பின்னர் ஏனைய வர்த்தக நிலையங்களிலும் இதனை நடைமுறைப்படுத்துவதெனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சந்தைகள், இறைச்சிக் கடைகள், உணவகங்களில் வியாபாரிகள் பொலித்தீன் பாவனையில் ஈடுபட்டால் அவர்களின் வியாபாரச் செயற்பாடுகளை இடை நிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (5-4-18)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லையம்பதி (அமுதாம்பிகை மணி மண்டபம்) சிங்கார வேலவன் சிவ காயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம் நூதன பிரதிஷ்ட மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.04-7 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. (5)


# பலாலி விமான நிலையம் விரைவில் அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-பலாலி விமான நிலைய அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 2 வாரத்துக்குள் அமைச்சரவையில் முன்வைத்து அமைச்சரவையின் அனுமதியைப் பெறவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவையின் அனுமதியுடன் விரைவில் இரு தரப்பும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (5-6)



புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய சதுர்த்தி உற்சவம் கடந்த சனிக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:- செ.ரவிசாந்)

## திறப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் புராண படன வித்தகர் அமரர் செல்லையா கந்தையாவின் நூறாவது பிறந்ததின ஞாபகார்த்தமாக புனரமைக்கப்பட்ட வகுப்பறைகள் திறப்பு விழாவும் நூல்கள் வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சு.துரைரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் (கிளிநொச்சி, முல்லைத்தீவு) ப.அரியரத்தினம், யாழ். மாவட்ட ஓய்வு நிலை நீதிபதி இ.வசந்தசேனன், யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர், ப.கணேசன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சி.இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# முச்சக்கரவண்டிகள் தொடர்பில் தவிசாளர் அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள சில முச்சக்கரவண்டிகள், வாடிக்கையாளருக்கு தரமற்ற சேவை வழங்குவதாக (முச்சக்கரவண்டிகளின் பராமரிப்பு இன்மை, அதிக புகை, அதிக ஒலி, பொருத்தமற்ற இருக்கைகள், அதிகளவு அதிர்வுடன் கூடிய இயந்திர இயக்கம் போன்ற பல்வேறு அசௌகரியங்கள் தொடர்பாக) தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் அதிரடி நடவடிக்கையெடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் சகல முச்சக்கர வண்டிகளும் பரிசோதனைக்குட்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று முன்தினம் 33 முச்சக்கர வண்டிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

அவற்றில் 12 முச்சக்கர வண்டிகளே பரிசோதனைகளின் பின்னர் பொருத்தமான வண்டிகளென சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஏனைய முச்சக்கர வண்டிகள் குறைபாடுகளுடன் காணப்பட்டன.

அவற்றை சீர்செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பாவனைக்கு விடப்படுமென கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் தெரிவித்தார். (5-8)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடகோவை அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் இராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.35 மணி முதல் 9.45 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறும். (5)



யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் விசேட கல்வி அலகுக்கான கட்டடத்திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை அதிபர் திருமதி.அம்பிகை சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முகாமைத்துவப் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன் கலந்து கொண்டார்.

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீஞான சக்தி வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தினமும் மாலை 7 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும். (5-4)

# அச்சு நடவடிக்கைகள் அனைத்தும் அரசாங்க அச்சக திணைக்களத்தில்

-கெஹலிய-

(கொழும்பு)

**கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அச்சு நடவடிக்கைகளும் அரச அச்சக திணைக்களத்தின் மூலம் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை வகுக்குமாறு வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**



இதற்கு அமைவாக ஆரம்ப நடவடிக்கை என்ற ரீதியில் கடவுச்சீட்டை அச்சிடுவதற்கு தேவையான வேலைத் திட்டத்தை வகுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

அரச அச்சக திணைக்களத்தின் செயற்பாடுகளின் மதிப்பீடு தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். தற்பொழுது முத்திரை, வாக்காளர் அட்டை விசாவிற்கான ஸ்ரிக்கர் மற்றும் வர்த்தமானி அறிவிப்பு ஆகியன அரசாங்க அச்சக திணைக்களத்தில் அச்சிடப்படுகின்றன.

அமைச்சு,அரச நிறுவனங்கள்,திணைக்களங்கள் போன்றவற்றின் அச்சு நடவடிக்கைகளில் 50 சதவீதம் அல்லது முடிந்தளவு பாதுகாப்பான அச்சு நடவடிக்கைகளை அசராங்க அச்சக திணைக்களத்தின்மூலம்மேற்கொள்ளவேண்டும்என்றும் அமைச்சர் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க அச்சக திணைக்களத்திற்கு அரசாங்க நிறுவனங்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய மிகுதி 500 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதாகும் என்று இந்த கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது. (ஜ-4)


## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக இரண்டு தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2020

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைக்கான தரவுகளை கணனிகளில் இணைய வழிகளில் பதிவேற்றம் செய்வதற்காக இரண்டு தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இந்தப் பதவி நிரந்தரமற்றது.
- இந்தப் பதவிக்குரிய பதவிக்காலம் ஆகக்கூடியது 6 மாதங்கள்.
- தெரிவு செய்யப்படுபவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பொறுப்பு கூறுபவராக இருப்பார்.
- ஒரு நாளுக்கு 500 ரூபா மட்டும் சம்பளமாக வழங்கப்படும்.
- ஒரு மாதத்தில் ஆகக் கூடுதலாக 20 நாட்கள் வேலை செய்ய முடியும்.

**இந்த பதவிக்குரிய தகைமைகளும் அனுபவமும்.**

01 NVQ நிலை 3/4/5 பாடநெறியில் தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது பயிற்சியாளராக இருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான தகுதி ICT இல் பெற்றிருக்க வேண்டும்.

02 க.பொ.த.சாதாரண தரத்தில் கணித மற்றும் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

03 பதவிக்காக தெரிவு செய்யப்படும் வைத்தியசாலைக்கு பொருந்தக் கூடியவகையில் சிங்களத்தில் அல்லது தமிழில் சரளமாக பேசக்கூடியவராக இருக்க வேண்டும்.

04 ஒரு அரச நிறுவனத்தில் தரவு நிரற்படுத்துநராக பயிற்சி பெற்றிருத்தல் மேலதிகமான தகைமையாக கொள்ளப்படும்.

05 கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்களது சுயவிபரக்கோவை மற்றும் தகைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு 07.09.2020க்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் -2020** என குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கான நேர்முகத் தேர்வு 11.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகிறேன்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(C-142)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சொந்தமாகக் கடை வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11109 | பிறப்பு: 1987 இந்து.<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Management AAT, CIMA, Accountant (private)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர் போன்ற உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: G/11106 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 18 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. பிரதேச செயலக அலுவலக சாரதி(அரச)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11110 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.ப: 3 சூரி,செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார், சொந்தத் தொழில் புரியும் மணமகன்<br>தொ.இ: G/11111 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: சூரி, செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: ACCA. Senior Fund Accountant (Private bank)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் வங்கி உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11113 | பிறப்பு: 1989 இந்து (சைவ-போசனம்)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா:40 ¼ செவ்10 இல்உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/11112 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 52 ¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. மாநகர சபை சுகாதாரப் பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11114 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 30 செவ் 6 இல்<br>தகைமை/தொழில் Computer Engineering<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகத்தர் அல்லது சுவிஸ், ஜேர்மன் நாட்டு மணமகன் இவர் விவாகரத்தானவர் விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/11118 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# தனிமைப்படுத்தலிலிருந்து 67 பேர் வெளியேறினர்

(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமில் உள்ள கொரோனா கண்காணிப்பு நிலையத்திலிருந்து 67 பேர் வெளியேறினர்.

கடந்த 11 ஆம் திகதியன்று இந்தோனேசியாவிலிருந்து நாடு திரும்பிய 69 பேர் இரணைமடுவில் அமைந்துள்ள விமானப்படை முகாமில் தங்க வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

14 நாட்கள் நிறைவு செய்துள்ள நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை முடிந்து கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்ட 67 பேர் அவர்களின் சொந்த இடங்களிற்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு நிலையத்திற்கு அழைத்துவரப்பட்ட 69 பேரில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர்கள் கடந்த வாரமளவில் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொற்று உறுதி செய்யப்படாத மிகுதி 67 பேரையும் சொந்த இடங்களிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இரணைமடு விமானப்படை பதில் கடமை கட்டளை அதிகாரி மஞ்சுள வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-5-100)

## கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 98ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா இன்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சந்தை வீதி வீமன்காமத்தில் உள்ள தலைமைக்காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் நா.கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி. சியாமளா சண்முகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு. பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வ.தெய்வேந்திரம், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தலைவர் செ.செல்வராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (5-110)

# வீடு புகுந்து வாள்வெட்டு இருவர் படுகாயம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டினுள் புகுந்து ஒரு குழுவினர் வீட்டிலிருந்தவர்களை வாள்வெட்டு நடத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வாள் வெட்டிற்கு இலக்கானவர்கள் தருமபுரம் வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் கோவிக்குமார் (வயது 26), பழனியாண்டி சதீஸ்குமார் (வயது 21) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டதுடன் சம்பவ இடத்திலிருந்து வாள் ஒன்றும் கைத்தொலைபேசி ஒன்றும் தலைக்கவசம் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5-316)

# சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்ட நால்வர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம்பகுதியில் நேற்று சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை மயில் வாகனபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுடன் அவரிடமிருந்து 20 லீற்றர் "கசிப்பும் உழவனூர் பகுதியில்" கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும் அவரிடமிருந்து 5 லீற்றர் கசிப்பும் தருமபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (5-4-316)

# சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விசேட பாதுகாப்புக் குழுக்கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டதில் கொரோனா அச்சுறுத்தலின் பின்னர் பாடசாலை மாணவர்கள், இளைஞர்களின் பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறிப்பாக கொரோனா பொது முடக்க காலப்பகுதியில் உடல், உள ரீதியாக எதிர்கொண்ட பிரச்சினைகள், பாடசாலை மற்றும் கிராமமட்டத்தில் எதிர்கொள்வதற்கான தயார்படுத்தலை ஏற்படுத்துவதற்காக குறித்த கூட்டம் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், பொலிஸார், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மருத்துவ அதிகாரிகள், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் சுகாதாரம், போசணை, கல்வி, போதைப்பொருள் மற்றும் சமூக எதிர்ப்பு நடவடிக்கைகள், சிறுவர் உள பிரச்சினைகள், தற்கொலைகள், சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் பொதுவான கலந்துரையாடலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)


# சமாதான நல்லிணக்க ஊடக கலந்துரையாடல்

(குப்பிழான்)

சமாதான நல்லிணக்க ஊடக கலந்துரையாடல் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ்.ஹரிதாஸ் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்பும் ஊடகவியலாளர்கள், ஊடகச் செயற்பாட்டாளர்கள் தங்கள் பெயர், முகவரி, பணியாற்றும் ஊடக நிறுவனம், தமது தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை 0776701349 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-4-18)

# நெற்செய்கையில் நோய்த்தாக்கம் விவசாயிகள் கவலை



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இடைப்போக நெற்செய்கையில் நோய்த்தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. 123 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நெற்பயிர் கதிர்ப் பருவத்தில் காணப்படுகின்ற போதிலும் பெருமளவிலான நெற்பயிர் கதிர்கள் வெண்சப்பியாக காணப்படுவதாகவும் இதனால் அறுவடையில் பாதிப்புகள் உருவாகலாம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மருந்துகள் விசிறப்பட்ட போதிலும் வெண் சப்பியினைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (5-4-350)

# பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்திற்கு 2019.12.31 ஆம் திகதியில் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் பட்டதாரிப் பயிலுநராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் (151 பேர்) பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியுடன் இரு நிழற் பிரதிகளையும் 2020.09.02 ஆம் திகதி அலுவலகத்துக்கு சமுகமளிக்கும் போது சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், திருமணமான பெண் அலுவலர்களாயின் திருமண சான்றிதழ், கிராம அலுவலரின் பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் - DS04, பட்டச் சான்றிதழ், பட்டம் தொடர்பான உறுதிக் கூற்று (Statement), பட்டம் தொடர்பான விரிவான பெறுபேற்றுச் சான்றிதழ் (Transcript). பெயரில் வித்தியாசம் இருப்பின் அதற்கான சத்தியக் கடதாசி, தேவைப்படின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம், ஒருவருட காலம் தொழில் அற்றவராயிருத்தலை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (பட்டத்தின் செல்லுபடித் திகதி 2019.01.01 இற்கு முன்னரெனில் ஒரு வருட காலத்திற்கு தொழிலில் ஈடுபடாதவராய் இருத்தல் வேண்டுமென்பதோ, பட்டத்தின் செல்லுபடித் திகதி 2019.01.01 இற்குப் பின்னராயின் அன்றைய தினத்திலிருந்து தொழிலில் ஈடுபடாதவராய் இருத்தல் வேண்டும்.)

ஏற்கனவே மேற்குறித்த ஆவணங்களை சமர்ப்பித்தவர்கள் மூல ஆவணத்துடன் ஒரு பிரதியை சமர்ப்பிக்கவும். (5)

# அனைத்து மாகாண சபைகளையும் கைப்பற்றுவோம்!

## திடமான நம்பிக்கையில் வியாழேந்திரன்



(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் 8 மாகாண சபைகளை ஆளும்கட்சி கைப்பற்றும் எனவும் சிலவேளைகளில் ஒன்பது மாகாண சபைகளையும் அரசாங்கமே கைப்பற்றும் என தபால் சேவைகள் மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களை பாதுகாக்கக்கூடிய, சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய முன்மொழிவுகளை இந்த அரசாங்கம் முன்வைக்கும். அதற்காக இந்த அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் நன்மைக்காக உழைக்கத் தயாராகவிருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கிராமிய வீதிகளின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்த பின்னர், இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதுள்ள அரசாங்கம் ஒரு உறுதியான அரசாங்கம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை நெருங்கியிருக்கின்ற ஒரு பலமான அரசாங்கம். இந்த பலம்பொருந்திய அரசாங்கத்தில் இந்த மாகாணத்தில் ஒரு அமைச்சராக நாடு முழுதும் சேவையாற்றும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தினை நாங்கள் ஒருபோதும் வீணடித்துவிட முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தினை சரியாகப் பயன்படுத்தி எமது மாவட்டத்திற்கு, மாகாணத்திற்கு அரசாங்கத்தினால் எமது மக்களுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தேயாக வேண்டும். அதுதான் மக்களின் அதிகூடிய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இந்த மாகாணத்தில் மக்களின் இருப்பினை பாதுகாப்பதற்காக வாக்களித்த அந்த மக்களை நாங்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது. அந்த மக்களினால் இந்த மாவட்டமும் மாகாணமும் நன்மை பெறவிருக்கின்றது.

அரசாங்கம் ஒரு விடயத்தினை சொல்வதற்கு முன்பாகவே ஒரு விடயத்தினை முன்மொழிய முன்பாகவே, ஒரு விடயத்தினைச் செயற்படுத்துவதற்கு முன்பாகவே எதிர்க்கட்சியினர் பல்வேறுபட்ட கதைகளை திரிவுபடுத்தி மக்கள் மத்தியில் பிழையான கருத்துகளைக் கொண்டு சேர்ப்பதை பார்க்க முடிகின்றது. எமது மக்கள் இதுகுறித்து எந்தவிதமான குழப்பமும் அடையத்தேவையில்லை.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களை பாதுகாக்கக்கூடிய, சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய முன்மொழிவுகளை இந்த அரசாங்கம் முன்வைக்கும். அதற்காக இந்த அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் நன்மைக்காக உழைக்கத்தயாராக இருக்கின்றோம்.


கடந்த காலத்தில் தற்போதுள்ள எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டு தங்களது அரசியல் நாடகத்தினை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் அரங்கேற்றிய அதே தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்க்கட்சிகள் இன்று அதே நாடகத்தினை கையிலெடுத்துள்ளனர். இதனை மக்கள் நன்றாகப் புரிவார்கள்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை நாங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தேர்தல் களத்தில் நாங்கள் முன்வைத்த மக்கள் எதிர்பார்ப்பு கள அரசியல் என்ற தொனிப்பொருளுக்கு மக்கள் எங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர். அந்த அங்கீகாரத்தினை சரியாக நாங்கள் மக்களுக்கு பயன்படுத்தி நாங்கள் சேவை செய்யவேண்டும்.

தேர்தல் காலங்களில் நாங்கள் கூறியவை அனைத்தும் நடைபெற்றுள்ளது. இனி மாகாணசபை வரவிருக்கின்றது. இலங்கையில் ஒன்பது மாகாணசபை இருக்கின்றது.

இதில் எட்டு மாகாண சபைகளை அரசாங்கம் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதில் எந்தவித மான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. சிலவேளைகளில் ஒன்பதையும் கைப்பற்ற முடியும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## மஞ்சள் மீட்பு



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து உள்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 1004 கிலோ கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி ஏத்தால பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த மஞ்சள் தொகை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சுற்றி வளைப்பில் 410 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் 410 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரையான காலப்பகுதியில் இந்த சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 198 சந்தேக நபர்கள் ஹெரோயின் வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறப்பதில் சிக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் மாதத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் முழுமையாக திறப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அயல் நாடான இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று தீவிர வேகமாகப் பரவி வருகின்றது.

இதுவே விமான நிலையத்தை திறக்காமல் இருப்பதற்கான பிரதான காரணம் என விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரயாச்சி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய விமான நிலையம் காலவரையறையின்றி தொடர்ந்து சுற்றுலா பயணிகளுக்காக திறக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள் மறுசீரமைக்கப்படும் - நிமால்



(கொழும்பு)

நீண்டகாலமாக தொழிலாளர்களுக்கு பாதிப்பாக உள்ள சட்டங்கள் பலவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அத்தோடு தொழில் புரியும் பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பல தடைகள் காணப்படுகின்றன. அவற்றை நீக்குவதற்காக வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஜ-4)

## தேவை, தூரத்தின் அடிப்படையில் அமைச்சர்களுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 70 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளதாக பொது சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார்.

விண்ணப்பதாரர்களின் தேவை மற்றும் தூரம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தற்போதுள்ள சூழ்நிலையில் 70 பேருக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதாயின் அமைச்சு பாரிய சிரமங்களை எதிர்கொள்ளும் எனவும் பொது சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள பிரதேச சபைகளின் நிர்வாக எல்லையானது கிட்டத்தட்ட "பிரதேச செயலகங்களின்" எல்லைகளுக்குச்சமனானதாகும். ஒரு குறித்த பிரதேசத்தினுள் ஒரு மாநகரசபையோ அல்லது ஒரு நகர சபையோ செயற்படுமாயின் அதன் அதிகாரத்துக் குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சியுள்ள பிரதேசம் பிரதேச சபையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது.**

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களைத் தாபிக்கும் போது சனத்தொகை மற்றும் சனத்தொகையின் அளவு (ஒரு சதுர கிலோ மீற்றருக்கு அல்லது அதனைவிடக் குறைந்த நிலப் பிரதேசத்திற்கு), வீடுகளின் அளவு மற்றும் அதன் பருமன், சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றம் (நீர், வீதி, மின்சாரம், தொலைபேசி, பாடசாலை, வைத்தியசாலை, ஏனைய அரச சேவைகள்), பிரதேசத்தில் காணப்படும் வர்த்தகக் கட்டடங்களின் எண்ணிக்கை, விவசாயமல்லாத பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை விகிதாசாரம், பிரதேச பொருளாதார கட்டமைப்பு மற்றும் வளப் பயன்பாடு, பிரதேச முக்கியத்துவம் (வரலாற்று ரீதியில் / பொருளாதார அல்லது ஏனைய விடயங்கள்), பிரதேச வருமான இயலுமைகள் என்பவை கருத்தில் எடுக்கப்படும் என உள்ளூராட்சி அமைச்சினால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

### உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தில் மாகாண சபைகளின் பங்கு

மாகாண சபைகளாவன பிராந்தியமொன்றின் ஆட்சிக்காக ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட நிறுவனங்களாகும். இம் மாகாண சபைகள் உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்ல.

மாகாண சபைகளின் உள்ளூராட்சி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரம் நாட்டின் பிரதான சட்டமான அரசியலமைப்பின் மூலம் கிடைக்கின்றது. அவை அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் 9ஆவது அட்டவணையின் 4.1, 4.2, 4.3, 4.4 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

**மாகாண சபைகளின் உள்ளூராட்சி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரம்அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத் தத்தின் 9ஆவது அட்டவணையின் 4.1, 4.2, 4.3, 4.4 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.**

### 13ஆவது திருத்தத்தின் 9 ஆவது அட்டவணையின் 4.1, 4.2, 4.3, 4.4 ஆகிய பிரிவுகள்

(அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் 7ஆம் வாசகத்தால் 9ஆவது அட்டவணையில் மாகாண சபை நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.)

4.1 உள்ளூராட்சி, கிராம நிர்வாகம் என்ற நோக்கங்களுக்காக மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்ற உள்ளூரதிகார சபைகள் இருப்பதால் அவற்றின் அமைப்பும், மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

4.2 உள்ளூரதிகார சபைகளை கலைத்ததற்கான தத்துவமுட்பட, (சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறு, கலைத்ததற்கான ஏதுக்கள் பற்றிய அத்தகைய நீதிமுறை மருவிய விசாரணைகளுக்கும், அவை தொடர்பிலான சட்டப்படியான பரிகாரங்களுக்கு அமையவும். அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறாகக் கணக்காய்வு தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமையவும்), சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல்.

4.3 உள்ளூரதிகார சபைகளுக்குத் தற்போதுள்ள சட்டத்தின்கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே அவை கொண்டிருக்கும். மாநகர சபைகளும், நகர சபைகளும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் அவற்றிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

தற் போதுள்ள சட்டத்தின்கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரதேச சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை உள்ளூரதிகார சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக்கூடும். ஆனால் அவற்றின் தத்துவங்களை அகற்றமுடியாது.

4.4 தற்போதுள்ள சட்டத்தின்கீழ் கிராமோதய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே கிராமோதய சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை கிராமோதய சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக்கூடும்.

**பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளின் மேற்பார்வைக்கும் கலைப்பதற்குமான அதிகாரம் அப் பிராந்திய மாகாண சபைக்கு உண்டு. ஆனால் கலைக்கும் பொருட்டு மாகாண சபை ஆளுநர், அமைச்சர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர் மற்றும் பிற அரசாங்க அலுவலர்களின் சேவைகள் பெறப்படல் வேண்டும்.**

பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளின் மேற்பார்வைக்கும் (படம் -1 ஐப் பார்க்க) கலைப்பதற்குமான அதிகாரம் அப் பிராந்திய மாகாண சபைக்கு உண்டு. ஆனால் கலைக்கும் பொருட்டு மாகாண சபை ஆளுநர், உள்ளூராட்சி அமைச்சர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர் மற்றும் பிற அரசாங்க அலுவலர்களின் சேவைகள் பெறப்படல் வேண்டும்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் மாகாண சபையினால் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் இயற்றப்படும். எனினும் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை சட்டங்களால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நீக்கக்கூடிய சட்டங்களை மாகாண சபையினால் விதிக்க முடியாது. அதிகாரங்களை அதிகரிக்கும் சட்டங்கள் விதிக்கப்படலாம். இவ்வேளையில் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் மாகாண அமைச்சர்கள் மூலமாக அமுலாக்கப்படும். உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் மாகாண அரச சேவைக்குச் சொந்தமானவர்கள். அது தொடர்பான அதிகாரங்கள் ஆளுநராலேயே மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து விதப்புரைகளைச் செய்யும் அதிகாரம் ஒம்புட்ஸ்மன் அல்லது பாராளுமன்ற ஆணையாளருக்கு உண்டு.

### மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்கள்


உள்ளூராட்சித் திணைக்களத்தின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி ஆராயும் போது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், அதாவது 1931 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகள்படி இலங்கையில் உள்ளூராட்சித் திணைக்களம் நிறுவப்பட்டது.

டொனமூர் காலத்தின் பின்னர் உள்ளூராட்சித் துறை பரவலாக விஸ்தரிக்கப்பட்டதுடன் மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் என 04 வகையான உள்ளூராட்சி நிறுவனங்கள் நாடு பூராகவும் விஸ்தரிக்கப்பட்டன.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆலோசனை கூறுதல், வழிகாட்டுதல், ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பணிகள் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதோடு, உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமை நிர்வாகியாக உள்ளூராட்சி ஆணையாளர் பதவி உருவாக்கப்பட்டது.

அதன் பின்னர் 1946ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களை நியமிப்பதற்கான சட்டத்தின் (Local Government – Administrative Regions) மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களின் பதவி மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

### உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளின் மேற்பார்வை




படம் -1

(தொடரும்...)

# வெற்றியை விட்டுக் கொடுத்த வரலாறு உண்டா?

## தேர்தலில் வேண்டுமென்றே தோல்வியை தழுவியதாக வீண் பிரசாரம்

### ஹிஸ்புல்லா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**எனது பல்கலைக்கழகத்தை பாதுகாக்கவே பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியை தழுவியதாகவும் சில சமூக வலைத்தளங்களில் கூறப்படும் பிரசாரங்கள் முற்றிலும் பொய்யானவை என முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.**

ஒவ்வொரு வேட்பாளரும் தான் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற முயற்சியிலும் அதனைத்தொடர்ந்து நம்பிக்கையிலுமே பிரசாரத்தில் ஈடுபடுவதாக குறிப்பிட்டுள்ள அவர், தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தனது மூச்சு இருக்கும் வரையிலும் மக்களுக்கான அரசியல் பயணம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்குடா தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றும்போது,

யாராவது இந்த நாட்டில் தனது வெற்றியை விட்டுக் கொடுத்த வரலாறுகள் காணப்படுகின்றதா? சிறுபிள்ளைத்தனமான சந்தேகங்களை மக்கள் மத்தியில் விதைப்பவர்கள் எதை எதிர்பார்த்து இவ்வாறு பிரசாரம் செய்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் மிகவும் புத்திசாதுரியமான முறையில் தங்கள் வாக்குகளை அளித்ததால் வழமையாக வரவேண்டிய இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி இல்லாமல் ஆக்கப்பட்டார். உரிமைக்கென்று தமிழ்க்கூட்டமைப்புக்கும் அபிவிருத்திக்கென்று தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிக்கென்றும் அவர்கள் வாக்களித்தார்கள்.

சிரேஷ்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இழந்த மாவட்டமாக மட்டக்களப்பு இப்போது காணப்படுகின்றது.

எம்மைப்போல ஆளுமைகளின் தேவை அரசுக்கு வேண்டும் எனக்கருதினால் அதற்கான வாசலை இறைவன் தனது அதிகாரத்தினால் திறந்து வைப்பான்.

நான் கிழக்கு மாகாண ஆளுநராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் என்று எனது ஆதரவாளர்கள் நம்பிக்கை கொண்டு வருகின்றனர்.

இந்த அரசு பயணிக்கும் பாதையை பொறுத்தே அதனைப் பெற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

எனக்கு அரசியல் அதிகாரம் வந்தாலும் வராவிட்டாலும் எனக்குரிய சுயாதீனமான அதிகாரங்களை பயன்படுத்தி எனது மூச்சு இருக்கும் வரை இந்த மக்களுக்காக சேவை செய்வேன் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

### அடுத்த வருடம் முதல் தாதியர் பட்டப்படிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் முதலாவது தாதியர் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் கல்வி ஆண்டிலிருந்து பட்டப்படிப்பை ஆரம்பிக்கவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 17 தாதியர் கல்லூரிகளை ஒன்றிணைத்து தாதியர் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், பேராசிரியர் ஜனிதா லியனகே குறிப்பிட்டார்.

தாதியர்களுக்கான பட்டப்படிப்பிற்குரிய கல்வி திட்டங்களை வகுக்கும் பணிகள் நிறைவுக்கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.



தாதியர் பல்கலைக்கழகத்தினூடாக வருடமொன்றுக்கு 3 ஆயிரம் பட்டதாரி தாதியர்களை உருவாக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக மானியங்கள் இணைந்து புதிய பல்கலைக்கழகத்திற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், பேராசிரியர் ஜனிதா லியனகே சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-6)

## ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை தொந்தரவு செய்வதை நிறுத்துங்கள்

### ஐ.தே.கவிடம் திஸ்ஸ வலியுறுத்து

(கொழும்பு)

இரண்டு கட்சிகளையும் இணைக்கும் செயற்பாடு ஆரம்பமானால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை தொந்தரவுக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக்கட்சி நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கும் செயற்பாடுகளை ஐக்கிய தேசியக்கட்சி முன்னெடுத்துள்ளமை தொடர்பில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் தொடர்பில் இடைக்காலத் தடை கோரப்படும் என்று தாம் நம்புவதாகவும் அத்தநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு அணியாக தொலைபேசி சின்னத்தில் இணைத்து செயற்படுவதற்கு கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இணக்கம் வெளியிட்டுள்ளார்.

எனினும் முதலில் ஐக்கிய தேசியக்கட்சி முதலில் தமது தலைமைத்துவ பிரச்சினைக்கு தீர்வைக்காண வேண்டும்.



பொதுத்தேர்தலில் பொது மக்கள் வழங்கிய ஆணையை ஐக்கிய தேசியக்கட்சி உணர வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ஜ-4)

## தனக்கு வழங்கப்பட்ட பதவி தொடர்பில் கடும் அதிருப்தியில் திஸாநாயக்க



(நுவரெலியா)

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அரசியல்வாதியான எஸ்.பி. திஸாநாயக்க தனக்கு வழங்கப்பட்ட இந்த பதவி தொடர்பில் கடும் அதிருப்தியில் உள்ளார்.

புதிதாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கே மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவி வழங்கப்படும்.

எஸ்.பி.திஸாநாயக்க 1989 ஆம் ஆண்டு முதல் முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கங்களிலும் பல அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளை வகித்துள்ளார்.

இந்த நிலையில் தனக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பதவி தொடர்பாக தனக்கு நெருக்கமானவர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள எஸ்.பி.திஸாநாயக்க, தனக்கு இந்த பதவியையும் வழங்காது பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரம் வைத்திருந்தால், இதனை விட கௌரவமாக இருந்திருக்கும் எனக் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாரதம்

## தமிழகமெங்கும் மீண்டுமொரு மொழிப்போர் வெடிக்கும்

### சீமான் எச்சரிக்கை

(சென்னை)

தமிழர்களின் எதிர்ப்பையும் மீறி ஹிந்தியைத் திணிக்க முற்பட்டால் தமிழகமெங்கும் மீண்டுமொரு மொழிப்போர் வெடிக்கும் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



மேலும், ஹிந்தியில் மட்டுமே வகுப்புகள் நடத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய தமிழக வைத்தியர்களை மத்திய ஆயுஷ் அமைச்சகச் செயலாளர் வைத்ய ராஜேஷ் கொடேச்சா வெளியேறக்கூறி அவமதித்ததற்கு சீமான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் மரபுவழி மருத்துவமுறைகளுக்கான மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் சார்பில் நடத்தப்பட்ட யோகா மற்றும் இயற்கை வைத்தியர்களுக்கான இணையவழி பயிற்சி முகாமில்,

ஹிந்தியில் மட்டுமே வகுப்புகள் நடத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய தமிழக வைத்தியர்களை மத்திய ஆயுஷ் அமைச்சக செயலாளர் வைத்ய ராஜேஷ் கொடேச்சா வெளியேறக்கூறி அவமதித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமென்றால், பல தேசிய மொழிகள் இருக்க வேண்டும். அம்மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

ஹிந்தி திணிக்க முற்படுமானால் தமிழகமெங்கும் மீண்டும் மொழிப்போர் வெடிக்கும் என எச்சரிக்கிறேன் என சீமான் தெரிவித்தார். (2)

## கொரோனா அச்சத்தால் பூக்கள் இறக்குமதிக்குத் தடை தோட்டம் தோட்டமாக அலையும் கேரள மக்கள்

(கேரளா)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளி மாநிலத்தில் இருந்து பூக்களை இறக்குமதி செய்ய கேரள அரசு தடைவிதித்துள்ளதால் மக்கள் பூக்களுக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

கேரளாவில் அனைவராலும் கொண்டாடப்படும் பண்டிகையில் ஒன்று ஓணம். இந்த விழா 10 நாட்கள் நடைபெறும். தற்போது கடந்த 22 ஆம் திகதி ஓணம் பண்டிகை தொடங்கி எதிர்வரும் 2 ஆம் திகதி வரை நடக்க இருக்கிறது.

ஓணம்பண்டிகை என்றாலே நினைவுக்கு வருவது பூக்கோலம் தான். ஒவ்வொரு நாளும் வித விதமான கோலங்கள் போட்டு மக்கள் மகிழ்வார்கள்.

தற்போது கொரோனா வைரஸ் காலம் என்பதால் வெளி மாநிலங்களில் இருந்து பூக்களை இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பூக்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்தால் கொரோனா வைரஸ் தொற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2)

## தங்கப் புதையல் கண்டுபிடிப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் நாட்டில் 1,100 ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணில் புதைக்கப்பட்ட தங்க நாணய புதையல் கண்டுபிடிக்கப்பட்டது.

இஸ்ரேல் நாட்டின் ரிஹோவோட் நகரில் உள்ள தொழில் பூங்காவுக்கு அருகே தொல்லியல் துறையினரால் பல நாட்களாக ஆராய்ச்சி நடைபெற்று வந்தன.

இந்த ஆராய்ச்சியில் பல இளைஞர்கள் தன்னார்வலர்களாக தங்களை இணைத்துக்கொண்டு அப்பகுதியில் புதைத்திருந்த படிமங்களை தோண்டி பரிசோதனை செய்து வந்தனர்.

கண்டுபிடித்த புதையலில் மொத்தம் 425 தங்க நாணயங்கள் இருந்தன. இந்த நாணயங்கள் அனைத்தும் 24 கரட் தூய தங்கம் என தெரிய வந்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட தங்கத்தின் மொத்த எடை 845 கிராம் ஆகும்.

இந்தத் தங்கம் 1,100 ஆண்டுகளுக்கு முந்தையது எனவும் இஸ்ரேல், பாலஸ்தீனம், சிரியா, ஜோர்தான் போன்ற பல்வேறு நாடுகளை ஆட்சி செய்த அபாசித் ஹலிப்ஹேட் என்ற இஸ்லாமிய மன்னரின் காலத்தை சேர்ந்ததாக இருக்கலாம் என இஸ்ரேல் தொல்லியல் துறை தெரிவித்துள்ளனர். (2)

## ஆபிரிக்காவில் போ

## முடிவிற்கு வ

### உலக சுகாதார அ

**(ஜெனிவா)**

**ஆபிரிக்காவில் போலியோ வைரஸ் நோய் மு**
**அங்கு போலியோ வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டு**
**அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.**

போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோய் 1952 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பெரும்பாலும் குழந்தைகளை தாக்கும் இந்த போலியோ வைரஸ் நோயால் இளம் வயதிலேயே முடக்குவாதம் ஏற்படுகிறது.

இந்த நோய் பாதிக்கப்படும் குழந்தைகள் வளர்ச்சி குறைவாகவும் பிற்காலங்களில் ஊனமுற்ற நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இந்த நோய்க்கு தடுப்பூசி 1955 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த தடுப்பூசி போலியோ சொட்டு மருந்தாக உலகின் பல நாடுகள் வழங்கி வருகின்றன. இந்த சொட்டு மருந்தால் போலியோ நோய் உலகின் பல நாடுகளில் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது.



ஆனால், உலகிலேயே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஆபிரிக்காவின் சில நாடுகளில் மட்டும் போலியோ ஒழிக்கப்படாமல் இருந்தது. இங்கு

## இந்தியாவில் கொரோ
## பாதிக்கப்படுவோர் எண்ணிக்

### மத்திய சுகாதாரத்

**(டில்லி)**

**"நாட்டில் கொரோனா நோய்த்தொற்**
**நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்**
**ஓகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் 11**
**8 சதவீதமாகக் குறைந்துள்ளது.**

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ள சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷண் மேற்படி தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "நாட்டில்




# வெளிநாடு

# போலியோ வைரஸ் வந்துவிட்டது

## அமைப்பு அறிவிப்பு

**நோய் முற்றிலும் முடிவுக்கு வந்து விட்டதாகவும் தப்பட்டு விட்டதாகவும் உலக சுகாதார அமைப்பு**



கிஸ்
ரிக்கா
லியோ
ங்கு

போலியோ தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன.

ஆபிரிக்க நாடுகளில் நைஜீரியாவில் மட்டும் போலியோ நோய் கண்டறியப்பட்டு வந்தது. அங்கு மருத்துவத்துறையினருடன் இணைந்து உலக சுகாதார அமைப்பு மற்றும் உள்நாட்டு அரசு, தன்னார்வலர்கள் என பலதரப்பட்ட துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தற்போது போலியோ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆபிரிக்காவில் போலியோ கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகவும் போலியோ இல்லாத பகுதியாக ஆபிரிக்கா மாறிவிட்டதாக்வும் உலக சுகாதார அமைப்பு நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.


உலகிலேயே தற்போது பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளில் மட்டும்தான் போலியோ நோய் பரவல் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (2)

## கொரோனா தடுப்பூசி

# முதற்கட்ட பரிசோதனையை ஆரம்பித்தது பிரித்தானியா

(லண்டன்)

இங்கிலாந்தின் அஸ்ட்ரா ஜெனாகா நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தும் முதல் கட்ட பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகின் பல்வேறு நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் கொரோனாத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் போட்டியில் முன்னிலையில் உள்ளன.

பல தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு அவை மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதனை செய்யும் முயற்சியில் பல நிறுவனங்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

ஒக்ஸ்போர்டு தடுப்பூசி உள்ளிட்டவை கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் முயற்சியில் நல்ல பலன் கிடைப்பது பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்தின் பிரபல மருந்து நிறுவனமான அஸ்ட்ரா ஜெனாகா கொரோனா வைரஸ்"க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. அந்நிறுவனம் ஏஇளட்டி 7442 என்று பெயரிடப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசி ஒன்றை உருவாக்கியுள்ளது.

இந்த தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தும் முதல்கட்ட பரிசோதனையை ஆரம்பித்துள்ளது.

இந்த பரிசோதனைக்காக 18 முதல் 55 வயது வரை உள்ள 48 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் ஏஇளட்டி 7442 கொரோனா தடுப்பூசி செலுத்தி பரிசோதனை செய்யப்படவுள்ளது.

இந்த பரிசோதனையில் தடுப்பூசி கொரோனா வைரஸினைக் கட்டுப்படுத்தி கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவது உறுதி செய்யப்படும் பட்சத்தில் அடுத்த இரண்டு கட்ட பரிசோதனைகளும் துரிதப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ரோனாத் தொற்றினால் ணிக்கை குறைவடைந்துள்ளது

## ரத்துறை தகவல்

**தொற்று பரிசோதனை எண்ணிக்கைக்கும் ரின் எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதம் தில் 11 சதவீதமாக இருந்தது. தற்போது அது**



கொரோனா நோய்த்தொற்று பரிசோதனை எண்ணிக்கைக்கும் நோய்த் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதம் ஓகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் 11 சதவீதமாக இருந்தது. தற்போது அது 8 சதவீதமாகக் குறைந்துள்ளது.

கொரோனா நோய்த்தொற்றுக்கான பரிசோதனைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதேவேளையில் அந்நோய்த் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் விகிதம் குறைந்து வருகிறது.

ரஷ்யா தயாரித்துள்ள 'ஸ்புட்னிக் 5' கொரோனா தடுப்பூசியை இறக்குமதி செய்வது தொடர்பாக இந்தியா ஆலோசனை நடத்தி வருகிறது.

அந்த மருந்து தொடர்பான முதற்கட்ட விபரங்கள் மட்டுமே தற்போது வரை கிடைத்துள்ளன. அது குறித்த விரிவான விபரங்களை ரஷ்யாவிடம் கோரியுள்ளோம்" என அவர் தெரிவித்துள்ளார். (2)

# நிறம் மாறிய ஏரி



(அங்காரா)

துருக்கியின் கொன்யா (Konya) நகரில் உள்ள மெயில் ஒப்ருக் (Meyil Obruk) ஏரி, குறைந்த நீர்மட்டம் மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக இளஞ்சிவப்பு நிறமாக (Pink) மாறியுள்ளது என்று கொன்யா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கல்வியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக அடர் நீல நிறத்தில் இருக்கும் ஏரியின் வண்ண மாற்றத்துக்கு பக்றீரியாக்களின் மிகப்பெரிய கட்டமைப்பே காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோமீற்றர் விட்டமும் 40 மீற்றர் ஆழமும் கொண்ட ஏரியின் உப்பு நீரில் பக்றீரியாக்கள் செழித்து வளர்வதால் இளஞ்சிவப்பு நிறத்திற்கு மாறி உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

ஏரியின் நீர் உப்புத்தன்மை வாய்ந்தது மற்றும் பக்றீரியாவைத் தவிர வேறு எந்த உயிரினமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பாராளுமன்றத்தின் நற்பெயரை உறுப்பினர்கள் பாதுகாக்க வேண்டும்

## எதிர்க்கட்சி பிரதம கொறடா வேண்டுகோள்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தின் நற்பெயரையும் கௌரவத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும என்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை திருத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகி இருக்கும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று முன்தினம் பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1989 இல் நான் ஆரம்பமாக பாராளுமன்றத்துக்கு தெரிவான போது இவ்வாறானதொரு கருத்தரங்கு எங்களுக்கும் நடத்தப்பட்டது. அந்த நடைமுறைக்கமைய தற்போதும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான கருத்தரங்குகள் புதிய உறுப்பினர்களுக்கு மிக முக்கியமானதாகும்.

அத்துடன் கடந்த காலங்களில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கை மற்றும் பேச்சுக்களால் பாராளுமன்றத்தின் கௌரவம் மற்றும் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறான சம்பவங்கள் இரண்டு தரப்பில் இருந்தும் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் இந்த பாராளுமன்றத்துக்கு விசேட பொறுப்புக்கள் இருக்கின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட, அனுமதிக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறாமல், பாராளுமன்றத்தின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படாமல் அதனை மாற்றியமைக்கும் பொறுப்பு புதிய உறுப்பினர்களுக்கு இருக்கின்றது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுமையுடன் இருக்க பழகிக்கொள்ள வேண்டும். சபையில் எமக்கு எதிராகக் கருத்துக்கள் தெரிவிக்கப்படும் போது அதனை அமைதியாக கேட்டுவிட்டு, பின்னர் சபாநாயகரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு எமது பிரச்சினைகள்ள தீர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சபாநாயகர் எப்போதும் உறுப்பினர்களின் பக்கமே இருப்பார். கடந்த காலங்களில் இருந்த சபாநாயகர்களும் அவ்வாறே செயற்பட்டிருக்கின்றனர்.

அதனால் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக நன்கு விளங்கிக் கொண்டு, பாராளுமன்றத்தின் நற்பெயரை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதுடன் மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# அருங்காட்சியகத்தில் கருஞ்சிறுத்தையின் சடலம்

(கொழும்பு)

கடந்த மே மாதம் லக்ஷபான வாழமலை தோட்டத்தில் பொறியில் சிக்கி உயிரிழந்த கருஞ் சிறுத்தையின் சடலம் பொது மக்கள் பார்வையிடுவதற்காக கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்புத்துறை பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி. சூரியபண்டார தெரிவிக்கையில்,

புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு வனவிலங்கு அமைச்சிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் கருஞ்சிறுத்தையின் சடலத்தை அருங்காட்சியகத்திற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறுத்தை மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் முடிந்தவுடன் குறித்த முடிவு உறுதி செய்யப்பட்டது.



கடந்த மே மாதம் 29 ஆம் திகதி அன்று குறித்த கருஞ் சிறுத்தை நல்லதண்ணி லக்ஷபான தோட்டத்தின் வாழமலை பகுதியில் வலையில் சிக்கிய நிலையில் வனவிலங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்டபோது காயமடைந்திருந்தமையால் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வன விலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க கடந்த வெள்ளிக்கிழமை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட கருஞ்சிறுத்தையின் சடலத்தினை பார்வையிடுவதற்காக அருங்காட்சியகத்திற்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மன நிறைவு

ஒரு பெரிய அரசன் இருந்தான். யயாதி என்று பெயர் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவனுக்கு நூறு வயது ஆகிவிட்டது. வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டியதெல்லாம் அனுபவித்து விட்டான். ஒருநாள் மரணம் அவனைத் தேடிவந்தது. "இதோ பாரப்பா....உனக்கு நேரம் வந்து விட்டது. உன்னை அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கின்றேன் புறப்படு" என்றது. இவன் பெரிய ராஜாதான்....போர்களிலே வீரத்ததையெல்லாம் காட்டியிருக்கின்றான். இருந்தாலும் இப்போது நடுங்க ஆரம்பித்து விட்டான். "என்ன இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டாய்.

நான் ஒரு நூறு வருடம் தானே வாழ்ந்து முடித்திருக்கின்றேன். அதற்குள் வந்துவிட்டாயா அழைத்துக் கொண்டு போவதற்கு என்றான். என்னப்பா இப்படி சொல்லுகின்றாய். உன் பிள்ளைகள் எல்லாம் தாத்தாவாகி விட்டார்கள். இன்னும் உனக்கு என்ன வேண்டியிருக்கு இந்த உலகத்திலே? என்றது அந்த மரணம். அந்த ராஜாவிற்கு நுறு மனைவிகள், நூறு பிள்ளைகள். அதனால் ஒரு யோசனை செய்த பின்னர் சொன்னான்... இதோ பார், நீ வந்து விட்டாய்.... வெறுங்கையோடு திரும்பிப்போக மாட்டாய் என்று எனக்குத் தெரியும். என் பிள்ளைகள் நூறு பேர் இருக்கின்றார் கள்...அவர்களிலே யாரையாவது கேட்டுப் பார்க்கின்றேன். எனக்குப் பதிலாக நீங்கள் யாராவது போகிறீர்களா? என்று.

யாராவது ஒருத்தரை சம்மதிக்க வைத்து அனுப்புகின்றேன். என்னை இன்னும் ஒரு நூறு வருடம் வாழ விட்டு விடு என்றான். மரணம் சொல்லியது உனக்குப் பதிலாக யாராவது ஒருத்தர் என்னுடன் வந்தால் போதும்... இருந்தாலும் நீ எல்லோருக்கும் அப்பா....எல்லோரையும் விட நீ தான் அதிக நாள் வாழ்ந்திருக்கின்றாய். எல்லாத்தையும் அனுபவித்தும் இருக்கின்றாய். அப்படி இருக்கின்ற போது நீயே இப்படி இருந்தால் உன் பிள்ளைகள் எப்படி என் கூட வரச் சம்மதிப்பார்கள் என்றது. இருந்தாலும் அந்த ராஜாவுக்கு நம்பிக்கை இருந்தது. பிள்ளைகளை ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டான். கேட்டுப் பார்த் தான். மூத்த பிள்ளைகள் எல்லாம் ஒன்றுமே பேசவில்லை, பேசாமல் நழுவிப்போக ஆரம்பித்தார்கள். கடைசி மகன் ஒருத்தன்....அவனுக்கு 16 வயதுதான் ஆகின்றது. அவன் முன்னால் வந்தான்.நான் தயார். என்னை அழைத்துக்கொண்டு போ என்றான். இவனைப்பார்த்ததும் மரணமே இரக்கப்பட ஆரம்பித்து விட்டது.

என்னப்பா இது; ஒன்றும் தெரியாதவனாக இருக்கின்றாய். உன்னை விட பல மடங்கு வயது அதிகமான உன்னுடைய மூத்த சகோதரர்கள் 99 பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இன்னும் இந்த உலகத்திலே வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். நீ இப்படிச் சொல்லுகின்றாயே, நல்லா யோசித்துச் சொல்லு என்றது. நான் நன்றாக யோசித்துத்தான் சொல்கின்றேன். எங்களுடைய அப்பா நூறு வருடம் வாழ்ந்திருக்கின்றார். அப்படியும் திருப்தியடையவில்லை.என் சகோதரர்கள் எல்லாம் என்னை விட இந்த உலகத்திலே அதிக காலம் வாழ்ந்திருக்கின்றார்கள்.

அவர்களுக்கும் திருப்தி ஏற்படவில்லை. இவற்றைப் பார்க்கும் போது எனக்கு ஒரு விடயம் நல்லாகப் புரிகின்றது. அதாவது நூறு வருடம் வாழ்ந்தால் கூட எனக்கும் திருப்தி ஏற்படப்போவதில்லை. அப்படி இருக்கின்ற போது நான் இப்போது போனால் என்ன? 90 வருடங்கள் கழித்துப் போனால் என்ன? பேசாமல் என்னை அழைத்துக் கொண்டு போ... என்றான். மரணம் அந்தப் பையனை அழைத்துக் கொண்டு போய் விட்டது.அதற்குப்பிறகு ஒரு நூறு வருடம் கழித்து அந்த மரணம் மறுபடியும் திரும்பி வந்தது.அந்த ராஜாவைப் பார்த்தது. இப்பவும் அந்த ராஜா அதே நிலைமையிலே தான் இருக்கின்றார். இப்போது அவன் என்ன சொல்லுகின்றான் தெரியுமா? இந்த நூறு வருடம் போனதே தெரியவில்லை. அவ்வளவு வேகமாகப் போய்விட்டது. என்னால் நிதானமாக அனுபவிக்க முடியவில்லை. என்னுடைய வயதான பிள்ளைகள் எல்லாம் ஏற்கனவே இறந்து விட்டார்கள். இப்போது எனக்கு இன்னுமொரு தலைமுறை வந்து விட்டது. இப்பொழுது எனக்குப் பதிலாக இன்னுமொருத்தனை அனுப்புகின்றேன்.

அவனை அழைத்துக் கொண்டு என்னை இன்னும் ஒரு நூறு வருடம் வாழ விடு என்று கேட்டான். மரணம் சரி என்று சொல்லி வேறு ஒருத்தனை அழைத்துக் கொண்டு போய்விட்டது. இப்படியே ஒன்பது தடவை ஆகி விட்டது. இப்படியே அந்த ராஜா தொள்ளாயிரம் வருடம் அதிகமாக வாழ்ந்தான். பத்தாவது தடவையாக மரணம் வந்து நின்றது. இப்போது அவன் சொன்னான்...நீ முதல் தடவையாக வந்த போது நான் எப்படி திருப்தி அடையாதவனாக இருந்தேனோ அதே நிலைமையிலே தான் இப்பவும் இருக்கின்றேன். இப்பவும் எனக்கு உன் கூட வர விருப்பம் இல்லை.

இருந்தாலும் வருகின்றேன். ஏன் என்றால் திருப்பித்திருப்பி உன்னிடம் எத்தனை தடவை தான் சலுகை கேட்கின்றது? கேட்டதே மிகவும் அதிகம். இருந்தாலும் ஒரு விடயத்தை இப்போது தெளிவாக புரிந்து கொண்டேன். ஒரு ஆயிரம் வருடத்திலே என்னால் திருப்தி அடைய முடியவில்லை என்றால் பத்தாயிரம் வருடம் இந்த உலகத்திலே வாழ்ந்தால் கூட என்னால் திருப்தி அடைய முடியாது. புறப்படு போகலாம் என்றான். இதுதான் சேர், நாங்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற உலக வாழ்க்கை. இதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு பெரியவர் இந்தக் கதையை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றார்.

இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருத்தர்.அவரைத் தேடிக் கொண்டு ஒரு நாள் 'மரணம்' வந்து அவர் முன்னால் நின்றது. நான் தான் மரணம் வந்திருக்கின்றேன் உன்னை அழைத்துக் கொண்டு போக என்றது. இவருக்கு கோபம் வந்து விட்டது. உடனே பளார் என்று அதன் கன்னத்திலே அறைந்து விட்டார். மரணம் கன்னத்தைத் தடவிக் கொண்டே "ஏன் என்னை அடித்தாய்" என்றது. "பின்ன என்ன... எவ்வளவு காலமாக உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது? ஏன் இவ்வளவு தாமதம்" என்றார் அந்த ஆள்.

# புகையிலை கலந்த வெற்றிலை; நாளாந்தம் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

**புகையிலை கலந்த வெற்றிலையை உண்பதால் நாட்டில் நாளாந்தம் மூன்று பேர் வீதம் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை ஊடாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.**

எனவே புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் சட்டத்துக்கு அமைய, புகையிலை கலக்கப்பட்ட வெற்றிலை வகைகளை விற்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் முழுமையாக தடைவிதிக்க வேண்டும் என்று புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தவிசாளர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை புகைத்தலால் 4 விநாடிக்கு ஒருவர் என்ற வீதத்தில் உலகில் ஒருவர் உயிரிழப்பதாகவும் இதற்கமைய, நாட்டில் வெற்றிலையைப் போல, புகைத்தலாலும் நாளொன்றுக்கு மூவர் வரையில் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-6)

# இலங்கையர்களை அழைத்துவரும் நடவடிக்கை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இடப்பிரச்சினை காணப்படுவதால், இஸ்ரேல் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கையர்கள் அழைத்து வரும் நடவடிக்கை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மீண்டும் இலங்கைக்கு வரும் எதிர்பார்ப்பிலுள்ள இலங்கையர்களுக்காக இலங்கைத் தூதரகம் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விமானம் மூலம் இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு வரவிருந்த நிலையிலேயே தூதரகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# மைத்திரியின் இல்லத்தில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்திற்கு சென்றுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்திற்கு நேற்றுக் காலை சென்றுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் , உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆஜராகுமாறு கடந்த 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தனக்கு குறித்த பொலிஸ் பிரிவில் ஆஜராக முடியாது எனவும் கொழும்பில் அமைந்துள்ள தனது இல்லத்திற்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்துகொள்ளுமாறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்த நிலையில், ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் நேற்றுக் காலை அவரின் இல்லத்திற்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# மாணவர்களை இலக்கு வைத்து புதியவகை பாக்கு வியாபாரம்

(திருகோணமலை)

திருகோணமலை-ரொட்டவெவ பகுதியில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து புதியவகை பாக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். பத்து ரூபாய் விலைக்கு இப்பாக்கு பக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அதிகளவில் மாணவர்கள் இதனை வாங்கி உண்பதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மொரவெவ பிரதேசத்தில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், கஞ்சா, ஹெரோயின் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில் முழு சிறுவர்களும் போதைப்பொருள் பாவிக்கக்கூடிய வகையில் சில்லறைக் கடைகளிலும் பாக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் பெற்றோர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஜ-4)

# இன்று பாராளுமன்றில் கணக்கறிக்கை



(கொழும்பு)

இந்த ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கான கணக்கறிக்கை இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கமைய, செப்டெம்பர் முதலாம் திகதி முதல் டிசெம்பர் மாதம் வரையான அரசாங்கத்தின் செலவுகளை கருத்திற்கொண்டு, இந்த கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதன்படி, இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

காலை 9.30 முதல் பிற்பகல் 6.30 வரை மதிய போசனை இடைவேளையின்றி இது தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-6)

# பொதுமக்கள் பார்வைக்கூடத்திற்கு மீள் அறிவித்தல் வரை பூட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பொதுமக்கள் பார்வைக்கூடம் மீள் அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல் தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக குறித்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அந்தப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், பாராளுமன்ற பொதுமக்கள் பார்வைக்கூடம் திறக்கப்படும் தினம் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9ஆவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இதன்போது பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததுடன், பதவிப் பிரமாணம் செய்துகொண்ட உறுப்பினர்களின் உறவினர்கள், பொதுமக்கள் பார்வைக் கூடத்தில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மாகாண சபைத் தேர்தல் வேண்டாம்! புதிய அரசமைப்பே வேண்டும்

## அரசிடம் குணதாஸ வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்துக்கே அரசு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்துள்ளதாவது,

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள சில அதிகாரங்கள் அச்சுறுத்தலானவை. தற்போது அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற போதிலும் சட்டத்தில் உள்ளன.

எனவே, அவற்றில் திருத்தம் மேற்கொள்ளாது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.



மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தல் உட்பட நாட்டுக்குத் தேவையான அரசமைப்பொன்றை உருவாக்கிய பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நாட்டில் இரண்டாண்டுகளாக மாகாண சபைகள் இயங்கவில்லை. இதனால் யாருக்கும் எந்தவித இழப்புகளும் இல்லை.

எனவே, புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு எனவும் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

53

## கலாநிதி முருகர் குணசிங்கம்

மேற்கண்ட பாடசாலைகளின் சிறப்பான நிர்வாக ஒழுங்குமுறையின் பொருட்டு ஒரு நடுவகச் செயலகம் அமைக்கப்பட்டு நிர்வாகப் பிரிவு, நிதிப்பிரிவு, கல்விப்பிரிவு, தமிழ்த் திறன் பிரிவு, கலைப் பிரிவு, விளையாட்டுப் பிரிவு போன்ற செயற்பாடுகளுக்குத் தனித்தனியான பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் நாடு முழுவதிலும் உள்ள தமிழ்ப் பாடசாலைகளை ஒருங்கிணைப்பதற்கென 12 மாநிலச் செயற்பாட்டாளர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர். பெற்றோர்கள் சார்பாக பிரதிநிதிகளும் தெரிவாகிச் செயற்பட்டு வருகின்றனர்.

ஜேர்மனி நாட்டுக் கல்விக் கொள்கையின்படி ஒரு மாணவர் ஆரம்பக்கல்வி தொடக்கம் பதினோராம் வகுப்புகள் வரை கல்வி கற்றுப் பின்னர் பல்கலைக் கழகக் கல்விக்கான தொடக்கக் கல்வியைப் பயில வேண்டும்.

அதன்படி தமிழ் மொழிப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி தொட்டு பதினோராம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது.

சுருங்கக் கூறினால் தமது இளம் தலைமுறையினரைத் தமிழ் மொழி, கலை, பண்பாடு, வரலாறு போன்ற சகல முறைகளிலும் ஆயத்தப்படுத்தி வளர்த்து ஒரு நல்ல குடிமகனாகவும் தமிழர் என்ற அடையாளத்தையும் கொடுப்பதில் அளப்பரிய பணியினை ஆற்றி வருகின்றன.

ஏனைய நாடுகளில் செய்றபடும் தமிழ் பாடசாலைகளுக்கெல்லாம் முன்னோடியாகச் செயற்பட்டு வருவதை இந்நூலாசிரியர் மேற்கண்ட பாடசாலைகளின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அறிந்து இருக்கின்றார்.

மேற்கொண்டு ஈழத்திற்கு வெளியில் மூன்றரை இலட்சம் ஈழத்தமிழர்கள் மிக அதிகமாக வாழும் கனடாவின் பக்கம் நோக்குவது பொருத்தம் ஆகும்.

குறிப்பாக ரொறன்ரோ நகரத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் மேற்கொண்டு வரும் தமிழ் மொழி கற்பிக்கும் செயற்பாடுகள் கனடா தமிழ்க் கல்லூரியின் ஆசிரியரும் முக்கியமான நிர்வாகியுமான குகதாசன் என்பவர் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் பின்வரும் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

கனடாவில் தமிழ் கற்பிக்கும் அமைப்புகளாக அரசுக் கல்விச் சபைகள், கத்தோலிக்க கல்விச் சபைகள், கனடா தமிழ்க் கல்லூரி, அறிவகம், சிவனியக் கோவில்கள், தொண்டு அமைப்புகள், தனியார் அமைப்புகள் முதலியவை காணப்படுகின்றன.

### அரசுக் கல்விச் சபைகள்

ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபை, யோர்க் கோட்டக் கல்விச் சபை, பீல் கல்விச் சபை, ஒட்டாவா மற்றும் கால்டன் கல்விச் சபை, மேல் கனடாக் கல்விச் சபை, மொன்றியல் கல்விச் சபை ஆகிய அரசுக் கல்விச் சபைகள் இளம் மழலை முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன.


இவை தமிழை ஒரு தொடர்பாடல் மொழியாகவே கற்பிக்க விளைகின்றன. இந்த அடிப்படையிலேயே இவற்றினது பாடத்திட்டங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன.

ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையானது இளம் மழலையர் முதல் எட்டாம் வகுப்பு வரையான மாணவருக்குத் தமிழ்மொழி கற்பிக்கும் பொருட்டு தமிழ்ப் பயிற்சி நூல்களை ஆக்கி உள்ளது.

பிற கல்விச் சபைகளிடம் பாட நூல்க்ளோ பயிற்சி நூல்களோ இல்லை. அவர்கள் தத்தம் விருப்பத்திற்கு ஏற்ப பாடங்களை ஆக்கிக் கற்பிக்கின்றனர்.

அல்லது ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையின் பயிற்சி நூல்களைப் பயன்படுத்துகின்றனர். மேலும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் மொழி கற்பிக்க ரொறண்ரோ மாவட்டக் கல்விச் சபை உட்பட எந்தக் கல்விச் சபையிடமும் பாட நூலோ பயிற்சி நூலோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

-மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்



மேற்கூறிய அரசுக் கல்விச் சபைகளது பன்னாட்டு மொழிக் கற்கைத் திட்ட அலுவலர்கள் வழங்கிய புள்ளி விபரப்படி மொத்தமாக 8860 மாணவர் அரசுக் கல்விச் சபைகளில் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

### கத்தோலிக்கக் கல்விச் சபைகள்

ரொறன்ரோ மாவட்டக் கத்தோலிக்கக் கல்விச் சபை, யோர்க் கோட்டக் கத்தோலிக்கக் கல்விச் சபை, பீல் கத்தோலிக்கக் கல்விச் சபை ஆகியனவும் இளம் மழலை முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரைத் தமிழ்மொழியைக் கற்பிக்கின்றன.

இவை கத்தோலிக்கம் தழுவிய தமிழைக் கற்பிக்கின்றன. இவர்களிடமும் பாட நூல்களோ பயிற்சி நூல்களோ இல்லை.

ஆசிரியர்கள் தத்தம் விருப்பத்திற்கமைய பாடங்களை ஆக்கிக் கற்பிக்கின்றனர்.

இக்கற்கை நெறித்திட்ட இணைப்பாளர்கள் அளித்த புள்ளி விபரங்களின்படி 1140 மாணவர்கள் கத்தோலிக்க கல்விச் சபைகளில் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

### கனடா தமிழ்க் கல்லூரியும் அறிவகமும்

கனடா தமிழ்க் கல்லூரியும் அறிவகமும் தமிழைப் பண்பாட்டு மொழியாகக் கற்பிக்கின்றன.

கனடாவில் வாழும் தமிழ்ச் சிறாருக்குத் தமிழர் வரலாறு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், பழந்தமிழர் வாழ்வியல் முதலியவற்றைப் புகட்டுகின்றன.

இவ்வமைப்புகள் பிறமொழிக் கலப்பற்ற தூய தமிழைக் கற்பிக்க முனைகின்றன. தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் அடுத்து வரும் தலைமுறைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென விளைகின்றன.

இந்த நோக்கிலேயே இவ்வமைப்புகளது பாடத்திட்டங்களும் பாட நூல்களும் பயிற்சி நூல்களும் ஆக்கப் பெற்றுள்ளன.

கனடா தமிழ்க் கல்லூரியானது இளம் மழலையர் முதல் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு வரை தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றது.

தமிழ்நாட்டின் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தோடு இணைந்து இளங்கலை, முதுகலை வகுப்புகளையும் நடத்தி வருகின்றது.

இவ்வமைப்பானது ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, பிரம்ரன், மோல்டன், ஒட்டாவா ஆகிய நகரங்களில் தமிழ் வகுப்புகளை நடத்துகின்றது. இக்கல்லூரி இணைப்பாளர் வழங்கிய புள்ளி விபரப்படி இந்தக் கல்வியாண்டில் 2150 மாணவர்கள் இவ்வமைப்பில் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

அறிவகமானது இளம் மழலையர் முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றது. இது ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, பிரம்ரன், மோல்டன், ஒட்டாவா மொன்றியல் ஆகிய நகர்களில் தமிழ்மொழி வகுப்புகளை நடத்துகின்றது.

அறிவக இணைப்பாளர் வழங்கிய புள்ளி விபரப்படி நடப்புக் கல்வி ஆண்டில் ஏறத்தாழ 3000 மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

### சைவக் கோயில்கள்

கனடாவில் உள்ள சைவக் கோயில்கள் சிலவும் தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன. இவ்வகையில் ரொறன்ரோ வரசித்தி விநாயகர் கோயில், ரொறண்ரோ பெரிய சிவன் கோயில், மொன்றியல் முருகன் கோயில், மொன்றியல் துர்க்கை அம்மன் கோயில் முதலியன இளம் மழலையர் முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழைக் கற்பிக்கின்றன.

இவை சைவம் தழுவிய தமிழைக் கற்பிக்கின்றன. இவர்களிடமும் பொதுவான பாடத்திட்டமோ பாட நூல்களோ பயிற்சி நூல்களோ இல்லை.

ஆசிரியர்கள் தத்தமக்குக் கிடைத்தவற்றை வைத்துக் கொண்டு கற்பிக்கின்றனர். தமிழ் கற்கை நெறிப் பொறுப்பாளர்கள் அளித்த புள்ளி விபரங்களின்படி 450 மாணவர்கள் கோயில்களில் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

### தொண்டு அமைப்புகள்

சில தொண்டு அமைப்புகளும் மழலையர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைத் தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன.

இந்தவகையில் சிவயோகர் மன்றம், துரம் தமிழ்ச் சங்கம், அகரம், அன்னை மறைத்தளம், தளிர், கியூபேக் அறிவுச் சோலை, மூத்தோர் இணையம், தமிழர் ஒளி, ஆத்மசோதி முத்தையா மன்றம், தமிழ் அருவி, வல்வைக் கல்விக் கழகம், மொன்றியல் மாணவர் மன்றம் ஆகியன தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன.

இவற்றிடமும் பாடத்திட்டமோ பாட நூல்களோ இல்லை. இவை அறிவகம், கனடா தமிழ் நுட்பக் கல்லூரி, இலங்கை அரசு அல்லது தமிழக அரசினது பாட நூல்களைப் பின்பற்றிக் கற்பிக்கின்றன.

இந்த அமைப்புகளது தமிழ் கற்கை நெறிப் பொறுப்பாளர்கள் அளித்த புள்ளி விபரங்களின்படி 700 மாணவர்கள் இவ்வமைப்புகளில் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

### தனியார் கல்வி நிறுவனங்கள்

இவை நீங்கலாக வருவாய் நோக்குக் கொண்ட சில தனியார் கல்வி நிறுவனங்களும் இளம் மழலையர் முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன.

இவையும் ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபை, அறிவகம், கனடா தமிழ்க் கல்லூரி, இலங்கை அரசு அல்லது தமிழக அரசினது பாடநூல்களைப் பின்பற்றிக் கற்பிக்கின்றன.

(தொடரும்)

# குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய
# 76 பேருக்கு மருத்துவ நியமனங்கள்

(கொழும்பு)

**மருத்துவக் கல்வி சம்பந்தமான குறைந்தபட்ச கல்வித் தகுதி தரம் தொடர்பான விடயங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத காரணத்தினால், குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய 76 பேருக்கு மருத்துவருக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாக அரச வைத்திய அதிகாரங்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



அரச மருத்துவக் கல்லூரி அல்லாத தேசிய மற்றும் வெளிநாடுகளில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெற்ற 83 பேருக்கு இலங்கை மருத்துவச் சபையின் அனுமதியுடன் நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாகவும் இவர்களில் 76 பேர் தகுதியை பூர்த்தி செய்யாதவர்கள் எனவும் சங்கத்தின் தொகுப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நபர்களில் 30 பேர் உயர்தரப் பரீட்சையை எழுதினார்களா? இல்லையா? என்பது குறிப்பிடப்படவில்லை. மேலும் 18 பேர் மூன்று பாடங்களில் சித்தியடையாதவர்கள் என்பதுடன் உயிரியல் விஞ்ஞானப்பாடத்தை கற்கவில்லை.

சுகாதார அமைச்சின் எழுதுவிளைஞர் பதவிக்கு கூட உயர் தரத்தில் சித்தியடைந்திருப்பது அவசியம் என்ற நிலையில், உயர்தரத்தில் கூட சித்தியடையாதவர்கள் மருத்துவத் துறையில் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டால், நாட்டின் மருத்துவத்துறை உலகத்திற்கு மத்தியில் வரவேற்பை இழப்பதை தவிர்க்க முடியாது எனவும் ஹரித அளுத்கே குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வு பெறுவதற்கு விமல் வீரவன்ச விதித்துள்ள காலக்கெடு

(கொழும்பு)

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் முரணான அணுகுமுறையை தேர்தல்கள் ஆணையாளர் பின்பற்றுகின்றார் எனவும் நடைபெறவுள்ள மாகாண சபைகள் தேர்தலுக்கு முன்னர் அவர் ஓய்வுபெற வேண்டும் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச காலக்கெடு விதித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,





முன்னைய அரசாங்கத்தின் போது மாகாணசபைகள் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் அலட்சியமாக அக்கறையற்று காணப்பட்டார்.

ஆனால் தற்போது மாகாண சபை தேர்தல்கள் இடம்பெறுவதை துரிதப்படுத்த அவர் முயல்கின்றார்.

மாகாண சபைகள் தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வுபெறுவது புத்திசாலித்தனமான செயல் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## உருளைக்கிழங்கு உற்பத்தி தொடர்பில் ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

உள்ளூர் உருளைக்கிழக்கின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிவகைகள் ஆராயப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்மூலம் உருளைக்கிழங்கின் இறக்குமதியை குறைத்து நாட்டின் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தமுடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனவே உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு உரிய ஊக்கம் வழங்கப்படவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் வருடம் ஒன்றுக்கு 250,000 தொன் உருளைக் கிழங்குக்கு கேள்வி உள்ளது. எனினும் நாட்டில் 80 ஆயிரம் தொன் உருளைக்கிழங்கே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நெல் மற்றும் தானிய உற்பத்தி தொடர்பான இராஜாங்க அமைச்சு அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

மாத்தறையிலிருந்து கடவத்தை நோக்கி மீன் ஏற்றிச் சென்ற லொறியொன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதி புனரமைப்பு அதிகாரிகளால் திருத்த வேலைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவ் விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நுகேகொட பகுதியைச் சேர்ந்த 63 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# நிதி மோசடிக்காரர்கள் தொடர்பில் சுங்க அதிகாரிகளால் விழிப்புணர்வு நடவடிக்கை

(கொழும்பு)

சில மோசடிக்காரர்கள் தொலைபேசி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள், சமூக ஊடகப் பிரயோகங்கள் போன்றவற்றை உபயோகித்து பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திற்கருகில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களில், இதுபோன்ற மோசடிகளால் பாதிக்கப்படுபவர்கள் பெருந்தொகை பணத்தை இழப்பதுடன் மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர்.

இவ்வாறான மோசடிக்காரர்கள் இலங்கை சுங்கத்தின் முகவரியிடப்பட்ட கடிதத்தாள்களையும் தொலைபேசி இலக்கங்களையும் உபயோகிப்பதோடு தாம் உண்மையானவர்கள் என்று நம்பச் செய்வதற்காக சில சந்தர்ப்பங்களில் சுங்க அதிகாரிகளின் பெயர்களைக் கூட பயன்படுத்துகின்றனர்.

இலங்கை சுங்கமானது



இனந்தெரியாதோரின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்புச் செய்யுமாறு பொதுமக்களுக்கு ஒருபோதும் அறிவிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாடசாலைக் கல்வியுடன் தொழிற்றுறைப் பயிற்சி கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

**பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களை கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதனூடாக பாடசாலை கல்வியைப் பெறும் போதே தொழிற்றுறைக்கான பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்த முடியும் என கல்வி மறுசீரமைப்பு மற்றும் தொலைதூரக்கல்வி தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி உபாலி சேதர குறிப்பிட்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலைகளில் ஆலோசனை முறையை கட்டாயமாக்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாணவர்களிடையே காணப்படக்கூடிய உளநல மற்றும் சமூக சிக்கல்களுக்கு இதனூடாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# கண்ணாடிப் போத்தல்கள் தடை களிமண் குவளைகள் அறிமுகம்

(கொழும்பு)

நாட்டில் அலுவலகங்கள், வாகனங்கள் மற்றும் வீடுகளில் குடிநீர் சேமித்து வைக்கும் கண்ணாடிப் போத்தல்களை நீக்கிவிட்டு அதற்காக களிமண் குவளைகளை அறிமுகப்படுத்தி வைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கும், புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய ஆணையத்திற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கண்ணாடிப் போத்தல்களைப் பயன்படுத்துவதனால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக ஆணையத்தின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய சுவையுடன் நீரைக் குடிக்கக் கூடிய வகையில் களிமண்ணால் போத்தல்களை உருவாக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர் சேமித்து வைப்பதற்காக பயன்படுத்தப்படும் கண்ணாடிப் போத்தல்களில் பெரும்பான்மையானவை மதுபான போத்தல்களாகும் என தெரிய வந்துள்ளது. (ஜ-4)

# எம்.சி.சி. உடன்படிக்கை புதிய அமைச்சரவை ஆராயும்



(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை குறித்த நிபுணர் குழுவின் அறிக்கை புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், குறித்த குழு தேசிய நலன்களைப் பற்றி பல கவலைகளை எழுப்பிய நிலையில் அவை குறித்து பதில்களைத் தேட வேண்டும் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த அறிக்கை புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நான் நினைக்கிறேன்.

புதிய அமைச்சரவை ஒவ்வொரு அமைச்சினாலும் குறித்த அறிக்கை அவதானிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவை அனைத்தும் முடிந்ததும், அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு விடப்படும்" எனத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் வளர்ச்சி குறித்து இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து கருத்துத் தெரி வித்திருந்த அவர்,

"இது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு ஏற்பாடு என்பதால் ஜனாதிபதி அதை மதிக்க உறுதி பூண்டிருந்தார்.

எந்தவொரு நாட்டிற்கும் எந்தவொரு தேசிய சொத்தும் முழுக்கட்டுப்பாட்டில் வழங்கப்பட மாட்டாது என்பதே ஜனாதிபதியின் கொள்கை ஆகும் அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2096

**யனு**

சிறுவர்களாய் இருக்கும் பொழுது
பென்சில் உபயோகித்தோம்,
பெரியவர்களாய் ஆன பின்
பேனா உபயோகிக்கிறோம்,
ஏன் தெரியுமா?
சிறு வயதில் செய்யும் தவறுகளை
அழிக்க முடியும்..
ஆனால் வயதான பின்னர்
செய்த தவறுகளை
அழிக்க முடியாது!

**கவி**

உங்களுடைய அன்பையும் நேரத்தையும், அதைப் பெற தகுதி இருப்பவர்களிடம் மட்டுமே பகிருங்கள்..!



**றனிஸ்**

சமநிலை தேடி மனநிலை பாதிக்கப்படுவதை விட



எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னிலை மாறாது இருந்து உயர்நிலை அடைவது உன்னதமானது

**அக்ஷி**

கிடைக்கவில்லை என்று ஏங்கி அழுவது ஏக்கம்



கிடைக்கவில்லையே என்று ஓங்கி உழைப்பது ஊக்கம்


**ஜஸ்மிலா**



கோபப்பட்டு வென்றுவிட்டாய் என்றால் உன் கோபம் பெரிது என்று அர்த்தமல்ல. அதை தாங்கி கொண்டவர்களின் பொறுமை பெரிது என்று அர்த்தம்

**தாஸ்**

அன்பின் எதிர்பார்ப்புகள் பணமோ, பொருளோ இல்லை.. பாசத்துடன் ஒரு பார்வை அக்கறை நிறைந்த சில வார்த்தைகள்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தெற்காசியாவின் மிக உயரமான ரோபோ

(கொழும்பு)

நாட்டில் முதல் மானுடவியல் உயர் தொழில்நுட்ப ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பயசென்குமாராய என அந்த ரோபோவிற்கு பெயரிடப்பட்டுள்ளது.

அரிமெக் நிறுவனத்தினால் இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து அந்த நிறுவனத்தின் தலைவர் சமீரா பிரசாத் ஜயசிங்க கருத்து தெரிவிக்கையில், “இந்த ரோபோவை உருவாக்க சுமார் மூன்று ஆண்டுகள் ஆகின.

இது தெற்காசியாவின் மிக உயரமான ரோபோ என்றும் சமீரா பிரசாத் ஜயசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், தியாசென் குமாரா என்ற ரோபோ எதிர்காலத்தில் தாமரைக் கோபுரத்தில் வரவேற்பாளராக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பல குற்றங்களில் தேடப்பட்டவர் கைது

(கொழும்பு)

பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர், எப்பாவல, இஹல ஹல்மில்லேவ பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கைது சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பெண் துஷ்பிரயோ கம் உள்ளிட்ட 18 குற்றங்க ளில் தேடப்பட்டு வந்த கோன ஹேன பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் காரில் பயணித்த சந்தர்ப்பத்தில் எப்பாவல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மைக்ரோ ரக துப்பாக்கி மகசின் மற்றும் 3 ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-6)



# ஆன்மீகம்

## மனம் மாற்றிய மந்திரக் குவளை

சாந்தமாக அவனை ஏறிட்டு நோக்கிய தத்துவஞானி, ‘இப்போது உன் வினாவின் பாதி விடையை நீ எட்டிவிட்டாய்!’ என்றார். ஞானி என்ன சொல்கிறார் என்று புரிந்து கொள்ளமுடியாமல் புருவத்தை உயர்த்தினான் தளபதி. ‘உன் சீற்றமான சினத்தினால் இப்போது நீ நரகத்தின் வாசலில் நிற்கிறாய்!’ என்றார் தத்துவஞானி. வீரன் கோபத்தைத் தணித்துக் கொண்டான். உருவியவாளை உறைக்குள் போட்டான்.

அமைதியாக ஞானியைப் பார்த்தான், புன்னகை புரிந்தபடி ஞானி புகன்றார். ‘உன் கேள்வியின் மீதி பதிலையும் இப்போது நீ பெற்றுவிட்டாய். வீணான சினத்தைக் கட்டுப்படுத்தி, வேண்டாத உணர்வுகளை நீக்கி அமைதி அடைந்துள்ள நீ இப்போது சொர்க்கத்தின் வாசலில் நிற்கிறாய்.’ தத்துவ ஞானியின் பதிலால் படைத்தளபதி தெளிவு பெற்றான்.

நமக்குள்ளேதான் இருக்கின்றன சொர்க்கமும் நரகமும். சூடு பறக்கும் தேநீரை ஒரு கோப்பையிலிருந்து மறு கோப்பைக்கு மாற்றி ஆற்றும் போது சூடு குறைகிறது. அதேபோல்தான் நாமும் நம்மை மீறி கோபம் வரும் சமயங்களில் அந்த இடத்தை விட்டு வேறு அறைக்குச் சென்றாலே போதும். நம் மனக்கொதிப்பு சற்று அடங்கும். சில நொடிகள் ஆற அமர சிந்திக்க ஆரம்பித்தாலே சினத்தால் பிரச்சினைதான் பெரிதாகும் என்கிற தெளிவு பிறக்கும்.

ஒரு மடத்தில் இரண்டு துறவிகள் இருந்தனர். இளையதுறவி சாந்தமானவர். முதிய துறவியோ எல்லாம் படித்திருந்தும் எடுத்ததற்கெல்லாம் கோபப்படுவார். சாந்தமான இளையதுறவி மூத்தவரை மாற்ற முயன்றார். ஒருநாள் அவரிடம், ‘இந்தாருங்கள்! இது ஒரு மந்திரக் குவளை.

உங்களுக்குக் கோபம் வரும் போதெல்லாம் இதில் மூன்று முறை தண்ணீர் எடுத்துப் பருகுங்கள். பிறகு பாருங்கள். உங்களிடம் கோபமே ஒருபோதும் அண்டாது!’ மூத்த துறவியும் அந்த பழக்கத்தை மேற்கொண்டார். என்ன வியப்பு! மெல்ல மெல்ல கோபமே வராதவராக, இளைய துறவியைப் போலவே அவரும் மாறிவிட்டார்.

இளையவரை அழைத்து இதயபூர்வ நன்றியைத் தெரிவித்து, ‘இந்த மந்திரக் குவளையின் சக்தி மகத்தானதாக உள்ளது,’ என்றார். இளையவர் வணங்கினார். ‘என்னை மன்னியுங்கள். நான் தந்தது மந்திரக் குவளை இல்லை. சாதாரணமான ஒன்றுதான். உணர்ச்சி மேலீட்டால் சினம் வரும் போது அறிவு பூர்வமாக சிந்திக்க இயலாது. ஆனால், சிந்திக்க முடியுமானால் கோபம் தானே குறையும்.

மூன்று முறை தண்ணீரை ஊற்றிக் குடிக்கும்போது சிறிது நேரம் கிடைக்கிறது. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன. ஆத்திரம் அகன்று, தான் ஆக்கிரமித்த இடத்தை அது நியாயத்திற்குத் தருகின்றது. அதனால்தான் உங்கள் கோபம் நீங்கியதே தவிர குவளையில் ஏதும் மந்திரமோ மாயமோ இல்லை!’ விநாடி நேர கோபத்தால் விளையும் தீமைகள் வாழ்வின் முழு நேரத்தையும் அல்லவா நிர்மூலமாக்கி விடுகின்றது! ஔவை மூதாட்டி அரிச்சுவடியிலேயே நமக்கெல்லாம் கற்றுக் கொடுத்திருக்கும் “ஆறுவது சினம்” என்னும் பாடத்தை முதுமை வரையிலும் மேற்கொள்ளாமல் இருந்தால் எப்படி? கோபத்தை இழப்பதே நமக்கு லாபம்!

# செய்த்துளிகள்

## ரூ.20 மில்.மதிப்புள்ள நகைகள் திருட்டு

(கொழும்பு)

ரத்மலானவில் உள்ள நகைக் கடையில் இருந்து சுமார் ரூ. 20 மில்லியன் மதிப்புள்ள நகைகள் திருடப்பட்டுள்ளதாக மவுண்ட்லவ்னியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மூன்று மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள குறித்த நகைக்கடையின் இரண்டாவது மாடியில் நகைகள் வைக்கப்பட்டிருந்ததாகவும் நகைக்கடையின் ஊழியர்கள் அங்கு வந்த போது, இரண்டாவது மாடியின் கதவு திறந்திருப்பதைக் கண்டு சென்று பார்வையிட்ட போது நகைகள் திருடப்பட்டதையறிந்து பொலிஸாரிடம் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-6)

## அதிசய ஆட்டுக்குட்டி




(புத்தளம்)

புத்தளத்தில் இரண்டு தலைகள், நான்கு கண்கள் கொண்ட ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது. ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த அபூர்வ ஆட்டுக்குட்டி பிறந்துள்ளது. இந்த ஆட்டுக்குட்டியுடன் மேலும் இரு குட்டிகள் பிறந்துள்ளன.

ஓய்வு பெற்ற இராணுவ வீரர் ஒருவரினால் வளர்க்கப்படும் ஆடு ஒன்றே அபூர்வ குட்டியை பிரசவித்துள்ளது. இந்த அபூர்வ ஆட்டுக்குட்டி மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| கோவா | 130 | 140 | 140 | 150 |
| கரட் | 80 | 160 | 160 | 150 |
| பூசணி | 100 | 100 | 90 | 100 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 140 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 140 | 160 |
| பயற்றங்காய் | 160 | 180 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 350 | 380 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 160 | 160 | 200 | 120 |
| போஞ்சி | 250 | 340 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 160 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70 | 60-80 |
| இராசவள்ளி | - | - | 250 | - |
| வெங்காயப்பூ | 250 | 180 | 160 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 60 | 100 |




# சூடுபட்ட புரோகிதர்கள்

மன்னர் கிருஷ்ண தேவ ராயருக்கு அவருடைய தாயார் மேல் அன்பும் மரியாதையும் உண்டு. தாய்மேல் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அவரது தாயார் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

வைத்தியரை அழைத்து தன் தாயின் உடல் நிலையைப் பரிசோதிக்கச் செய்தார். பரிசோதனை செய்த வைத்தியரும் "தாயார் அதிக நாள் தாங்கமாட்டார்கள்.

விரைவில் சிவலோகம் சென்று விடுவார்கள்" என்று கூறினார். இதனால் மன்னர் வேதனையுற்றார்.

பிறகு தன் தாயாரிடம் "அம்மா, உங்களுக்கு சாப்பிட எது மிகவும் ஆசையாக இருக்கிறது" என்றார்.

அதற்கு அந்தத் தாய் "மாம்பழம்தான் வேண்டும்" என்றார். அப்போது மாம்பழம் கிடைக்கக்கூடிய காலமல்ல. இருப்பினும் தன் ஆட்களை அனுப்பி எங்கிருந்தாவது மாம்பழம் வாங்கி வருவதற்கு ஏற்பாடு செய்தார்.

மாம்பழம் வந்து சேர்வதற்குள் அந்தத் தாயார் மரணம் அடைந்து விட்டார். மாம்பழம் சாப்பிடாமலேயேதனது தாயார் மரணம் அடைந்ததை எண்ணி மன்னர் மிகவும் வேதனை அடைந்தார்.

அதற்குப் பரிகாரம் காண அரண்மனைப் புரோகிதர்களை அழைத்து ஆலோசனை கேட்டார். பேராசை பிடித்த புரோகிதர்களும் "மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால் அவரது ஆன்மா சாந்தியடைய தங்கத்தால் 108 மாங்கனியை 108 புரோகிதர்களுக்குத் தர வேண்டும்" என்றனர்.

சரி... என்ற மன்னர் சில நாட்களில் தங்க மாம்பழம் தயார் ஆனதும் அவற்றை 108 புரோகிதர்களுக்கு கொடுத்தார்.

இச்செய்தி தெனாலிராமனுக்கு வேதனையளித்தது. புரோகிதர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க எண்ணினான். அதன் படியும் செயலாற்றத் துணிந்தான்.

புரோகிதர்களைச் சந்தித்து "என் அம்மாவிற்குத் திதி வருகிறது. அதற்குத்தாங்கள் அனைவரும் வந்து புரோகிதம் பண்ணுங்கள். என்னால் முடிந்தளவு தருகிறேன்" என்றான்.

புரோகிதர்களும் மகிழ்ந்து ராமன் வீட்டிற்கு வந்தனர். அவனும் புரோகிதர்களை வரவேற்று உட்காரச் செய்தான். பின்கதவுகளை நன்கு தாழிட்டுப் பூட்டிக் கொண்டான்.



ஏற்கனவே நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கம்பியால் ஆளுக்கு ஒருசூடு போட்டான். புரோகிதர்கள் ஐயோ அம்மா வென்று கதறினார்கள். பின் மன்னரிடம் சென்று முறையிட்டனர்.இதைப் பார்த்த மன்னர் தென்னாலிராமன் மீது அளவிலடங்காக் கோபங் கொண்டார்.

தெனாலிராமனைப் பார்த்ததும் "ஏனடா புரோகிதர்களுக்கு இவ்வாறு சூடுபோட்டாய்" என்று கேட்டார். "மன்னாதி மன்னா... என்னை மன்னிக்க வேண்டும். நான் சொல்லுவதை தாங்கள் கவனமாகக் கேட்க வேண்டுகிறேன்.

என் தாயார் உடல் நலமில்லாதிருந்து இறக்கும் தறுவாயில் வலிப்புநோய் வந்து விட்டது. அதற்கு வைத்தியர்கள் என் தாயாருக்குச் சூடு போடும்படி சொன்னார்கள்.

நான் சூடுபோடும் முன் என் தாயார் இறந்துவிட்டார்கள். ஆகையால் என் தாயாரின் ஆன்மா சாந்தியடைய புரோகிதர்களுக்கு சூடுபோடும் படி பெரியவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னபடியே தான் புரோகிதர்களுக்குச் சூடு போட்டேன். இதில் என்ன தப்பு" என்று மன்னரிடம் கேட்டான் தெனாலிராமன்.

இதைக்கேட்ட மன்னர் கோபம் கொண்டு "என்னடா தெனாலிராமா, இது முட்டாள் தனமாக இருக்கிறதே" என்றார்.

இல்லை அரசே, விளக்கமாகக் கூறுகிறேன் சற்றுக் கேளுங்கள்" என்றான்.

முன்பு தங்கள் தாயார் மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால் அவர்கள் ஆன்மா சாந்தியடைய 108 பொன்மாங்கனிகள் 108 புரோகிதர்களுக்குக் கொடுத்தால் தான் அவர்கள் ஆன்மா சாந்தியடையும் என்று சொன்னார்களே அதன்படியும் தாங்கள்கொடுத்தீர்களே..."

அதுபோலவே என் தாயாரின் வலிப்பு நோய்க்கு சூடு போட முடியாமல் போனதால் தான் இவர்களுக்குச் சூடு போட்டேன் என்றான். இதைக்கேட்ட மன்னர் நகைத்துவிட்டார். தெனாலிராமனைப் பாராட்டினார். புரோகிதர்களின் பேராசையையும் புரிந்துகொண்டார்.

**நீதி: பரிகாரம் என்ற பெயரில் கொள்ளை அடிக்கக்கூடாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!

இந்தச் சமயத்தில் கீழைச்சாளுக்கியர்களுக்கிடையே அப்போது கலகம் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் எதிரிகளாக மாறியிருந்தார்கள்.

கிருஷ்ணை, துங்க பத்திரை ஆறுகளுக்கு இடையே வடக்கே இருந்த பகுதிகளை மேலைச்சாளுக்கியர் ஆட்சி செய்து வந்தார்கள்.

அவர்களுடைய உறவினர்களான கீழைச்சாளுக்கியர்கள் கிருஷ்ணை, கோதாவாரி ஆறுகளுக்கு இடையே இருந்த பகுதிகளை ஆண்டு கொண்டிருந்தார்கள். இதுதான் வேங்கை நாடு வேங்கி நாடு என்றழைக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு கிளைகளாக இருந்த சாளுக்கியர்கள் கலகத்தால் மேலும் இரண்டு பிரிவுகளாக ஆனார்கள்.

ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் மேலைச்சாளுக்கிய நாட்டை சத்யாஸ்ரயன் என்கிற மன்னர் ஆண்டு வந்தார். இந்த நிலையில் கி.பி. 998 இல் கீழைச்சாளுக்கியர்கள் உதவி தேடி ராஜராஜனிடம் சரணடைந்தார்கள்.



கிருஷ்ணை ஆறு

சக்திவர்மன் என்கிற சாளுக்கிய மன்னர் ராஜராஜனிடம் முறையிட்டதால் மேலைச்சாளுக்கியர்களுக்கு எதிராக வேங்கி நாட்டோடு போரிட்டது சோழர் படை.

கீழைச்சாளுக்கியர்கள் உதவி தேடி வந்ததால் கீழைச்சாளுக்கியர்கள் பகுதி முழுக்கச் சோழர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

மேலைச்சாளுக்கியர்கள் பல நூற்றாண்டுகளாக மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்களின் அடிமையாக இருந்து இரண்டாம் தைலப்பன் மற்றும் அவர் மகன் சத்யாஸ்ரயன் ஆகிய சாளுக்கிய மன்னர்கள் மூலமாக மறுவாழ்வு பெற்று தங்களுக்கென்று சில எல்லைகளை (இரட்டடிபாடி என்கிற நகரம் மேலைச்சாளுக்கியர்களின் நகரமாக இருந்தது) வகுத்து வேங்கிப் பகுதியை ஆண்டு வந்தார்கள்.

முதலில் மேற்குக் கடற்கரையிலுள்ள பகுதிகளைச் சுற்றிவளைத்தது சோழர்படை. இதனால் துங்கபத்திரை- கிருஷ்ணை ஆறுகள் வரை சோழர்களின் எல்லைகளாக மாறின.

இது மேலைச்சாளுக்கியர்களின் தெற்கு எல்லை. இதனால் மிகவும் நடுங்கிப் போனார் சத்தியாஸ்ரயன். சோழர் செல்வாக்கு தன் நாட்டின் எல்லைவரை பரவி வருவதைக் கண்ட அவர் உடனே நாட்டைப் பாதுகாக்க அதிரடி முயற்சிகள் மேற்கொண்டார்.

வேங்கை நாட்டின் கீழைச்சாளுக்கியர்கள் இந்தப் போரில் ராஜராஜனுக்கு உதவியிருப்பது மேலும் சினம் கொள்ள வைத்தது. இது சோழர்களுக்கு எதிரான போர் என்பதை விடவும் கீழைச்சாளுக்கியர்களுக்கு எதிரான போராக அவர்கள் அறிவித்தார்கள்.

(தொடரும்)

சரியானது என்று உணர்ந்த பின்னும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் மகா கோழைத்தனம்.
- கன்பூஷியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகருங்கள்

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை உள்ளபடி ஹன்சார்ட்டில் வெளியாகியுள்ளது.

உலகின் மூத்த மொழியும் இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் மொழியுமாகிய தமிழ் மொழியால் உங்களை வாழ்த்துகிறேன் என நீதியரசர் விக்னேஸ்வரன் புதிய சபாநாயகரை வாழ்த்தினார்.

இந்த நாட்டின் மூத்த குடிகள் தமிழர்கள் என்பதையும் அவர்களின் தாய் மொழி தமிழ் என்பதையும் நீதியரசர் மிகத் தெளிவாகக் கூறியதால், வெகுண்டெழுந்த சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர்,

நீதியரசர் விக்னேஸ்வரனின் மேற்குறித்த உரைப் பகுதியை ஹன்சார்ட்டில் இருந்து நீக்க வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விட்டிருந்தனர்.

எனினும் அவர்களின் கோரிக்கையை மீறி நீதியரசர் விக்னேஸ்வரனின் உரை ஹன்சார்ட்டில் அப்படியே வெளியிடப்பட்டுள்ளது.

இச்செயலானது சபாநாயகர் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதற்கு மேலாக, நீதியரசர் விக்னேஸ்வரனைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தது எத்துணை பொருத்தம் என்பதும் அனைவராலும் உணரப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க, மீண்டும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற வேதாளம் முருங்கை மரத்தில் ஏறத் தலைப்பட்டுள்ளது.

ஏலவே அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற வாக்குறுதிகள் அனைத்தும் தவிடுபொடியாகிப் போயிற்று.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று வெறுமை பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்ட பயன் தமிழ் மக்களின் செல்வாக்கை இழந்ததுதான்.

இதுதான் என்றால் இல்லை, எவருக்கும் நேர்மையில்லாதவர் என்று கூறுமளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி கண்டார். இதுவே ஈற்றில் கண்ட பயன் என்றாயிற்று.

இதனோடு அரசியலமைப்புச் சீர்திருத்தம் முற்றுப் பெற்றது என்றால் இல்லை. புதிய ஆட்சியாளர்களும் அரசியலமைப்பு என்ற காவடியைத் தூக்கித் தோளில் வைத்து கூத்தாடிக் காலங் கழிக்க முனைகின்றனர்.

இத்தகைய காலங் கடத்தும் வேலைகளுக்கு இடம் கொடாமல், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான பூர்வாங்க வேலைகளைச் செய்தாக வேண்டும்.

இதற்காக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபடுவதுடன் பேச்சுக்களுக்கான சர்வதேச உதவிகளையும் இணைத்துக் கொண்டு களத்தில் இறங்க வேண்டும். இதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் தமிழ் மக்கள் பேரவை அனுசரணை வழங்குவது நன்மை தருவதாகும்.

## சமூகவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக இளைஞர்கள் இணைந்துள்ளதை பாராட்டுகிறோம்

### கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்

(முறிகண்டி)

சமூகவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக இளைஞர்கள், கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்து நிற்பதை பாராட்டுகின்றோம் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மை நாட்களாக கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தில் 100 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் சுயமாக முன்வந்து பேர்தைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிராக களத்தில் குதித்துள்ளமையைப் பாராட்டும் விதமாக நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகளை நாங்கள் கட்டுப்படுத்துவதற்கு கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் இளைஞர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைப்பதில்லை. இவ்வாறான நிலையில் வட்டக்கச்சி பிரதேசம் இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளினால் பாதிப்புறுகின்றோம் என்பதை உணர்ந்து பாதுகாப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாக இருக்கின்றது. இது ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகவும் பார்க்க முடிகின்றது.

ஆயினும் அவர்களிற்கு தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் அதற்கு பொறுப்பாக உள்ள பொலிஸ் திணைக்களத்திடம் நான் பேச உள்ளேன்.

இவ்விடயம் தொடர்பில் அவர்களுடன் பேசிய பின்னர் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பில் பின்னர் தகவல் வழங்குவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-100)

## காலபோகச் செய்கைக்கு காணிகள் வழங்குமாறு அமைச்சர் உத்தரவு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனைவிழுந்தான்குளம், ஜெயபுரம் கிராமங்களில் உள்ள வயல் நிலங்களை இவ்வாண்டு காலபோக பயிர்ச் செய்கைக்கு ஏற்றவகையில் மக்களுக்கு வழங்குமாறு வனவளத் திணைக்களத்திற்கு கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமாகிய டக்ளஸ் தேவானந்தா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆனைவிழுந்தான்குளம், ஜெயபுரம் கிராமங்கள் தென்னிலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இக்கிராமம் உருவாக்கப்பட்ட போது வயல் நிலங்களும் வழங்கப்பட்டிருந்தன.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக குறித்த வயல் நிலங்கள் மக்களால் துப்புரவு செய்யப்படவில்லை.

2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் குறித்த காணிகளை துப்புரவு செய்ய முற்பட்டபோது வனவளத் திணைக்களம் மக்களை காணியினைத் துப்புரவு செய்ய அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக இரு கிராம மக்களினாலும் தொடர்ச்சியாக போராட்டங்களும் நடத்தப்பட்டன.

இந்நிலையில் இரு கிராமங்களுக்கும் பயணம் செய்த அமைச்சர் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து ஜனாதிபதியின் கொள்கைகளுக்கமைவாக குறித்த வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற் கொள்வதற்கு வனவளத்திணைக்களம் அனுமதிக்குமாறும் மக்கள் காணிகள் தொடர்பான ஆவணங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறும் இவ்விடயம் தொடர்பாக அமைச்சரவையில் முன்வைப்பதாகவும் மக்களிடம் தெரிவித்தார். (5-4-350)

### இழுவைப்படகு மீன்பிடி விவகாரம்

## தகுந்த சேற்றுப் படுக்கைகளை அடையாளப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, வல்வெட்டித்துறை பிரதேச கடற்றொழிலாளர்கள் இழுவைப் படகுகளை பயன்படுத்த தகுந்த சேற்றுப் படுக்கைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் குறித்த ஆய்வு நடவடிக்கைகளை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த ஆய்வுப் பணிகள் நிறைவடைந்து ரோலர் எனப்படும் இழுவைப் படகுகளை பயன்படுத்தக் கூடிய கடற்பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டதும், இதுவரை வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்கள் மத்தியில் நிலவிய இழுவைப்படகு தொழில்தொடர்பான முரண்பாடுகள் முற்றுப் பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை பிரதேச கடற்றொழிலாளர்களில் ஒரு பகுதியினர் 1978 ஆம் ஆண்டு முதல்1989 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆண்டு முழுவதும் இரவு நேரத்திலும் பின்னர் 1990 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பகல் நேரத்திலும் இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர்.

இருப்பினும் 2011 ஆம் ஆண்டில் இருந்து, ஆவணி-பெப்ரவரி வரையான காலப்பகுதியில் காலை 6 மணியில் இருந்து மாலை 4 மணி வரை மாத்திரமே குறித்த தொழிலில் ஈடுபட்டு வந்த நிலையில், இழுவைப் படகு மீன்பிடி முறையினால் கடல் வளம் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டதன் காரணமாக 2017 ஆம்ஆண்டுகொண்டு வரப்பட்ட இழுவைப் படகு தடைச் சட்டத்தின் அடிப்படையில், அடையாளப்படுத்தப்பட்ட சேற்றுப் படுக்கைகள் நிறைந்த பிரதேசத்தில் மாத்திரமே இழுவைப் படகுகள் பயன்படுத்தப்பட முடியும்என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும், வல்வெட்டித்துறையில் இழுவைப் படகுகள் பயன்படுத்தக் கூடிய சேற்றுப் படுக்கைகள் அடையாளப்படுத்தப்படாத நிலையில், குறித்த பிரதேசத்தில் தற்போது சுமார் 40 இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி சுமார் 160 இற்கும் மேற்பட்டவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்துவதனால் தமது கடல் வளம் பாதிக்கப்படுவதாக குறித்த பிரதேசத்தை சேர்ந்த ஏனைய கடற்றொழிலாளர்களும் கடற்றொழிலாளர் சங்கங்களும் குற்றஞ்சாட்டி வருவதுடன் எதிர்ப்பும் வெளியிட்டு வருகின்றன. இதனால் இரண்டு தரப்பினருக்கும் இடையில் முரண் பாடுகளும் தோன்றியுள்ளன.

இதனையடுத்து குறித்த விவகாரம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உரிய தரப்பினரை அழைத்துக் கலந்துரையாடிய அமைச்சர், சட்ட ரீதியாக தடை செய்யப்பட்ட் தொழில் முறையாக இருக்கும் இழுவைப் படகு மீன்பிடியை உடனடியாக நிறுத்துமாறும் குறுகிய காலப் பகுதிக்குள் நாரா நிறுவனத்தின் ஊடாக இழுவைப் படகு பயன்படுத்தக் கூடிய பிரதேசத்தினை அடையாளப்படுத்தி தருவதாகவும் உறுதி அளித்திருந்தார்.

அதனடிப்படையில் நேற்று நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் குறித்த ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-5)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தொழிலைச் செய்வதில் ஊக்கம் கொள். நியாய முறையில் பொருளைத்தேடு. அநியாயத்தை மனத்திலும் கருதாதே. மேலுலகம் உனதாகும்.
- மகாவீரர்

# பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள்-2020

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தும் 2020 ஆம் ஆண்டிற்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை மின்னொளியில் அச்சுவேலி விக்னேஸ்வரா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15 கழகங்கள் மோதுகின்ற இப்போட்டியில் முதலில் பிரிவு அணிகளுக்கிடையே போட்டிகள் நடைபெறவுள்ளன.

அதனடிப்படையில் நாளை இரவு 7 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் எதிர் உடுப்பிட்டி சிவகுமாரன் அணிகளுக்கும் 8 மணிக்கு அச்சுவேலி தோப்பு வாலிபர் எதிர் சிறுப்பிட்டி கலையொளி அணிகளுக்கும் 9 மணிக்கு அச்சுவேலி யூத் எதிர் கச்சாய் வொளிகிங்ஸ் அணிகளுக்கிடையேயும் போட்டிகள் நடைபெறவுள்ளன. (4-7)

## விதை நெல் விற்பனை ஆரம்ப நிகழ்வு



(நெளுக்குளம்)

வவுனியா விதை உற்பத்தியாளர் சம்மேளனத்தினால் விவசாயத் திணைக்களத்தின் விதிமுறைகளிற்கு அமைவாக உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் விற்பனை ஆரம்ப நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன விற்பனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த விதை நெல் வகைகள் மாவட்டத்திற்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு விவசாயத் திணைக்களத்தால் அதன் முளைதிறன் பரிசோதிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அந்தவகையில் **BG-352, BG-360, AT-362, BW-367, BG-406, BG-450** இனங்களைக்கொண்ட விதை நெல் வகைகள் விற்பனைக்காக இருப்பில் உள்ளதுடன், 20.5 கிலோகிராம் அளவுகொண்ட நெல் மூடை 1800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாகாண நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் ந.சிறிஸ்கந்தராஜா, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார், பிரதி விவசாய பணிப்பாளர்தெ.யோகேஸ்வரன், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அருந்ததி வேல்சிவானந்தம் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதி நிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-5-299)

## 600 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அன்டர்சன் புதிய சாதனை




டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகள் வீழ்த்தி இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் புதிய சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் சவுத்தாம்டனில் நடைபெற்றது.

இந்த இறுதி நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வீரர் அசார் அலியை வீழ்த்தி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 600 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது வேகப்பந்து வீச்சாளராக ஜேம்ஸ் அன்டர்சன் சாதனை படைத்துள்ளார்.

ஜேம்ஸ் அன்டர்சன் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ளார்.

இந்த பட்டியலில் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுகளுடன் முதல் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## பார்சிலோனா அணியிலிருந்து விலக மெஸ்ஸி தீர்மானம்

நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் லியோனல் மெஸ்ஸி பார்சிலோனா அணியிலிருந்து விலக விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஐரோப்பிய கால்பந்தாட்ட தொடரில் மெஸ்ஸி தலைமையில் களமிறங்கிய பார்சிலோனா அணி காலிறுதிப் போட்டியில் பேயர்ன் முனிச்சிடம் 8 இற்கு 2 என்ற கணக்கில் தோல்வி அடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் நடைபெறவுள்ள கொரோனா பரிசோதனைக்கு தான் வரப்போவதில்லை எனவும், அணியிலிருந்து உடனடியாக விலக விரும்புவதாகவும் பார்சிலோனா அணி நிர்வாகத்திடம், மெஸ்ஸி தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. மெஸ்ஸி தனது 13 ஆவது வயதிலிருந்து பார்சிலோனா அணியில் விளையாடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## நொதேன் பிறிமியர் லீக் 2k20

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- AA சுப்பர் கிங்ஸ் எதிர் அரியாலை கில்லாடி 100
- AA சுப்பர் கிங்ஸ் - 97/5
- அரியாலை கில்லாடி 100 - 101/5
- அரியாலை கில்லாடி 100, 5 இலக்குகளால் வெற்றி
- ஆட்ட நாயகன் - அஜித் - 60 ஓட்டங்கள்



- சங்கானை ரொப் 11 எதிர் வட ஸ்ரைக்கர்ஸ்
- சங்கானை ரொப் 11 - 104/3
- வட ஸ்ரைக்கர்ஸ் - 50/10
- சங்கானை ரொப் 11 54 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் - தாருகாஷ் - 48 ஓட்டங்கள் ஆட்டமிழக்காது




- கிங்கோப்ராஸ் ஜப்னா எதிர் AA சுப்பர் கிங்ஸ் மன்னார்
- கிங் கோப்ராஜ் ஜப்னா - 97/9
- AAசுப்பர்கிங்ஸ்மன்னார் - 75/10
- கிங்ஸ் கோப்ராஸ் ஜப்னா 22 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் - பிரியலக்சன் - 48 ஓட்டங்கள்

## கூட்டமைப்பின்...

கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் மற்றும் கொறடா தொடர்பான நிலைப்பாடுகள் பாராளுமன்ற குழு கூட்டத்தில் முடிவெடுத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் இவ்விடயம் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், கூட்டமைப்பின் பேச்சாளராக என்னை நியமிப்பதாக பங்காளிக் கட்சித் தலைமைகளின் கூட்டத்தின்போதே முடிவு எடுக்கப்பட்டது.

எனினும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின்போதே அது உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட வேண்டும். அது இன்னும் கூடவில்லை. அதன்போதே தெரிவுகளை மேற்கொள்ள முடியும்.

எனவே உத்தியோகபூர்வமான பேச்சாளர் என்று நான் இப்போது கூறமுடியாது. இந்தவாரம் பாராளுமன்றக் குழுக் கூட்டம் கூடுவதாக இருந்தது. எனினும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளமையால் அது தாமதமாகியுள்ளது.

எனவே கூட்டம் இடம்பெறும்போது அந்த தெரிவுகள் இடம்பெறும். அதில் எந்த பிரச்சினையும் இருக்கப் போவதில்லை என தெரிவித்தார். (ம-299)

## முன்னாள் ஜனாதி...

குழுவின் பொலிஸ் பிரிவினர் நேற்றுக் காலை வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அங்கு சென்றிருந்தனர்.

அதனடிப்படையில் அவரிடம் சுமார் 9 மணிநேர வாக்குமூலம் பெற்று அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் நேற்றுக் காலை அங்கு சென்றிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றைய தினம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு கடந்த 21ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தனக்கு குறித்த பொலிஸ் பிரிவில் முன்னிலையாக முடியாது எனவும் கொழும்பில் அமைந்துள்ள தனது இல்லத்திற்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளுமாறும் முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தார்.

அதற்கமைய ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் நேற்றுக் காலை அவரின் இல்லத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இடைக்கால...

தில் இடம்பெற்றது.

2021ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டம் உருவாக்கப்படவுள்ளமையினால் மூன்றாம் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையினை உருவாக்க அமைச்சரவை கன்னிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கை கடந்த ஒரு வார காலமாக முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய எதிர்வரும் நான்கு மாத காலத்திற்கு தேவையான இடைக்கால கணக்கறிக்கையை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மூன்றாம் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையின் முழுச் செலவினம் 1747.68 பில்லியன் நிதியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அரச சேவைகள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு 194.38 பில்லியன் நிதி ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுக்களை காட்டிலும் அரச சேவைகள் அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, பாதுகாப்பு அமைச்சுக்கு 174.09 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள அரமுறைக்கடன்களை செலுத்த 778.39 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால கணக்கறிக்கைக்கு ஒதுக்கியுள்ள நிதியை திரட்டிக் கொள்ள 1300 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள இடைக்கால கணக்கறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான இருநாள் விவாதம் இன்றும் நாளையும் இடம்பெறும்.

நாளை 28ம் திகதி இடைக்கால கணக்கறிக்கை பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்டோ அல்லது வாக்கெடுப்பு இன்றியோ நிறைவேற்றிக் கொள்ளப்படும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கையுட...

ரால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு பின்னர் உலகம் படிப்படியாக தயாராகி வருவதால், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தற்போது நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது என பிரதமர் ராஜபக்ஷ பதில் உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத்தார்.

குறிப்பாக, வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல், முதலீடுகளை ஊக்குவித்தல், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய முன்னுரிமை விடயங்கள் குறித்து பிரதமர் கூறினார்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் இலங்கையுடன் உறவுகளைப் பேணுவதில் பிரித்தானிய அரசாங்கமும் அமைச்சர்களும் ஆர்வமாக உள்ளனர் என பிரித்தானிய பதில் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மேலும் பிரித்தானியாவின் சர்வதேச வர்த்தக அமைச்சர் ரணில் ஜெயவர்தன இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார் என்றும் பதில் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த சந்திப்பின்போது இருவரும் துறைமுக நகரத்தின் முன்னேற்றம், முதலீட்டை ஈர்த்தல், கிராமப்புற பொருளாதாரம் மற்றும் நிலையான விவசாயம் தொடர்பாகவும் பேசப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## அமைச்சுக்கான...

கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்து வருட திட்டமொன்றை வகுக்க வேண்டிய பாரிய பொறுப்பு செயலாளர்களுக்கு உள்ளது.

ஒவ்வொரு வருடத்திலும் அடைய வேண்டிய இலக்குகளை அதில் குறிப்பிட வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்கள் மத்தியில் சென்று பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்குங்கள்.

அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை அற்றுப் போயுள்ளமை மக்களிடம் உள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.

அடுத்ததாக, அரச சேவை மீதான நம்பிக்கை அற்றுப்போயுள்ளது. துரித பெறுபேறு அவசியம். மக்களும் துரித பெறுபேற்றையே எதிர்பார்க்கின்றனர் எனக் கூறினார். (ம)

## தமிழர்கள் சுய...

1998 முதல் 2009 வரை இலங்கையில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புகள் குறித்து இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கருத்துக்களை வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தம் தொடர்பாகவும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து மார்க் சால்டர் எழுதிய நூலை டுவிட்டரில் பகிர்ந்து, தயான் ஜெயதிலக்க மற்றும் மார்க் சால்டருக்கும் இடையிலான இந்த விவாதம் கற்றுக் கொண்ட பாடங்களைப் புரிந்து கொள்ள உதவுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவின் கீழ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை மற்றும் வெள்ளைக் கொடி சம்பவத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றிய முழு வெளிப்பாடு தேவை என்றும் சமாதான முன்னெடுப்புகள் பற்றிய ஒவ்வொரு பதிவும் பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும் என்றும் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த எரிக் சொல்ஹெய்ம், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான விடுதலைப்புலிகளின் திட்டம் மற்றும் "வெள்ளைக் கொடி" விவகாரம் ஆகிய இரண்டின் உண்மைகளும் மார்க் சால்டரின் "ஒரு உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர" என்ற புத்தகத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறினார்.

மேலும் இலங்கையில் தமிழர்கள் மற்றும் பிற இனத்தவர்களுக்கு முறையான சுய ஆட்சி மற்றும் சிறுபான்மை உரிமைகளை நிறுவ இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்றும் வன்முறை இல்லாமல், போராட நிறைய இருக்கிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்தோடு கடந்த காலத்தில் செய்த அதே தவறுகளை வரலாற்றில் மீண்டும் மீண்டும் செய்வதைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற போது அமைதியாக அதை பார்த்துக்கொண்டு தாங்கள் இருக்கவில்லை என்றும் 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத்துடன் தாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மே மாதம் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் பாலசிங்கம் நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் சரணடைய ஒப்புக் கொண்ட போதும் "வெள்ளைக் கொடி" சம்பவத்தில் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர் என்றும் இந்த இரண்டு உண்மைகளும் மறுக்க முடியாதவை என்றும் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டின் முற்பகுதியில் போரை முடிவுக்கு கொண்டுவர பிரபாகரன் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றும் இது பல்லாயிரக்கணக் 24


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26-08-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1049
P 8 8 5 1 0 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2521
G 38 46 73 78
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/08/26
சீட்டிழுப்பு இலக்கம் 4226
V 5 4 6 1 5 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0593
M 06 06 19 43 70

செவன
திகதி 26/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 290
P 11 33 37 62

ராசி
வெற்றி வாரம் 2903 வர்ணம் பச்சை திகதி 26.08.2020
வெற்றி இலக்கங்கள் 16 24 28 37 மகரம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,921,349
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1022
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.08.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,321,450/-
வெற்றி இலக்கங்கள் 24 32 42 75 I
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1942
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 104

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3356 திகதி: 2020.08.26
ஊதா
வெற்றி இலக்கங்கள் 16 25 39 67 U
38,070,569/-

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 361 திகதி 26.08.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 19 26 36 விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,874,156
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## தமிழர்கள்...

கான தமிழ் மக்கள் மற்றும் விடுதலை புலி உறுப்பினர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் கூறினார்.

அந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, இந்தியா அனைத்தும் ஆயுதங்கள் இல்லாமல் அனைவரையும் வெளியேற்ற எங்களுக்கு உதவ தயாராக இருந்தன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)


**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (MSO)

புகையிரத நிலைய அதிபர்

பிரிவு I - சனி 8.30 - 1.30
பிரிவு II - ஞாயிறு 8.30 - 1.30

**இறைவரி சேவை, சட்டமாணி**
**S.L.A.S, S.L.E.A.S**

பிரிவு I - சனி 8.30 - 1.30
பிரிவு II - ஞாயிறு 8.30 - 1.30

பிரபல துறைசார் விரிவுரையாளர்கள்

**AMC ACADAMY**
BMC Lane, Clock Tower Road.
T.P : 077 694 4543 (3705)


## 13 கொரோனா...

ஒருவர் மற்றும் மாலைதீவில் இருந்து வந்த இருவர் ஆகியோரே இந்த 13 பேரில் அடங்குகின்றனர்.

இதனையடுத்து இலங்கைக்குள் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை 2984 ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில் வைத்தியசாலைகளில் 153 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

83 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் உள்ளனர். தொற்றில் இருந்து குணமானோரின் எண்ணிக்கை 2819 ஆக உள்ளது. (ம)

## சிங்கள மக்களு...

தமிழரின் தொன்மை குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றியமைக்கு காரணம் இதுவே. மேலும் கொள்கை ரீதியாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து செயற்படத் தயார் எனவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம)

## மாகாண...

சபை முறைமை நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை அந்த முறைமையே நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் இந்த முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் அவற்றின் மூலம் நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 31 வருட காலப்பகுதியில் மாகாண சபைகள் மூலம் நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தை கண்டறியுமாறும் தனது அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக தொடர்ந்து பேசி வந்த வீரசேகரவிற்கு, மாகாணசபைகள் அமைச்சு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## துன்னாலை...

பஸ்தர் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, அவரது வீட்டில் இருந்து இரண்டு பெரல்களில் 300 லீற்றர் கோடா கைபற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## முழுமையாக...

யலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளுமாறு எல்லே குணவங்ச தேரர் வலியுறுத்தியுள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான கெவிந்து குமாரதுங்க மற்றும் அனுப பெஸ்குவல் ஆகியோர் நேற்று கொழும்பில் எல்லே குணவங்ச தேரரை சந்தித்தனர்.

இதன்போது, அரசியலமைப்பை பகுதி பகுதியாகக் கழட்டி, மீளப் பொருத்தி, திருத்த முயற்சிக்க வேண்டாம் என எல்லே குணவங்ச தேரர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூரண அரசியலமைப்பொன்றை நாம் உருவாக்க வேண்டும். அதில் பிரச்சினை இல்லை. சில சரத்துக்கள் உள்ளன. அவற்றை மாற்ற வேண்டும். 83 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் கலவரம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் 'ஒற்றை' என்ற சொற்பதத்தை அரசியலமைப்பிற்குள் நானே உள்ளடக்கினேன். ஆனால் அதுவும் வலுவானது அல்லவென தற்போது உணர்கின்றேன். ஆகவே, மரத்தின் கிளைகளைப் பாதுகாக்காமல் மரத்தின் வேரை பாதுகாப்பதற்கு திடசங்கற்பம் பூண வேண்டும் என உங்கள் இருவருக்கும் கூற விரும்புகிறேன். வேர் பாது காக்கப்பட்டால் கிளை களும் பாதுகாப்பாக இருக்கும் என அவர் குறிப்பிட்டார். (ம)


**இந்துநாகரிகம்**

கருத்தரங்கு

A/L 2020 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

ஆசிரியர்: **A. மேனன்**
B.A (Hons) (Hindu Civilization Spl.), M.A

காலம் - 31.08.2020, 01.09.2020
நேரம் - காலை 9 மணி (திங்கள், செவ்வாய்)
இடம் - பொருளியற் கல்லூரி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

◆ உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும். ◆ கையேடுகள் வழங்கப்படும். ◆ வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். (C-146)

**தொடர்பு : 077 220 9651**

**வாடகைக்கு**

யாழ். பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தியில் கடை வாடகைக்கு உண்டு. (3694)

**தொடர்பு -077 203 0309**

**விற்பனைக்கு**

நாம்பன் மாட்டுக் கன்றுகள் இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு. (3698)

**தொடர்பு -077 818 5017**


வரைவுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்.

## மகளிர் குழு உறுப்பினர் தெரிவிற்கான கிளை பொதுச்சபைக் கூட்ட

## அறிவித்தல் - 2020.08.28

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைப் பரப்பிலுள்ள. சகல கிராம சேவையாளர் பிரிவுகளுக்குமான மகளிர் குழு உறுப்பினர் தெரிவிற்காக கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

01. இதற்கமைய கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆள்வழி மூலமாகவும், தபால் மூலமாகவும் தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் (2019.06.30 இற்கு முன் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்தவர்கள் ) இவ் அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொண்டு குறித்த தினத்தில், குறித்த நேரத்தில் கூட்டத்திற்கு சமுகமளித்து இம் மகளிர் குழுத் தெரிவிற்காக தங்கள் சகல ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

02. கிளை பொதுச்சபைக் கூட்டங்களின் நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் மூன்றில் ஒன்று (1/3) அல்லது முப்பது பேர். (30) இதில் எது குறைவோ அத்தொகையாகும்.

03. குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து மகளிர் குழுவிற்காக தலைவர். துணைத் தலைவர். செயலாளர் உட்பட ஐந்து பேர் கொண்ட குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அக்குழு உறுப்பினர்களே சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களாக கருதப்படுவர்.

ஒப்பம் :- திருமதி சி. விஜயா
செயலாளர்
புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள்
தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம். (C-150)


**கட்டடம் வாடகைக்குத் தேவை**

யாழ். நகரில் இருந்து 10 km இற்கு உட்பட்ட பிரதேசத்தில் களஞ்சிய சாலை அமைக்கக்கூடிய கட்டடம் / வீடு உடனடியாகத் தேவை.

தொடர்பு (3783)
**077 907 3761**

**விற்பனைக்கு**

யாழ். நகரில், கடைச்சாமி வீதி, நீராவியடி என்னும் இடத்தில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு (3694)
**077 604 4288**

**காணி தேவை**

யாழ். நகரில் இருந்து 3 km தூரத்திற்குட்பட்ட கே.கே.எஸ் வீதியில் 3 பரப்புக் காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்பு (3700)
**076 020 4395**

**வீடு வாடகைக்கு**

யாழ். பஸ் தரிப்பிடத்தை அண்டிய பகுதியில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய அலுவலக பாவனைக்கு உகந்த வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு (C-154)
**076 396 0084, 077 292 8300**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-112)

**0768226240**

**வேலையாட்கள் தேவை**

முல்லைத்தீவு, கிளிநொச்சியில் புதிதாக இயங்க இருக்கும் நிறுவனம் ஒன்றிற்கு அதே இடங்களில் வசிக்கும் கணனி அறிவுள்ள பெண் வேலையாட்கள் தேவை. (3684)

தொடர்புகளுக்கு
**077 266 6429, 076 700 1072**

**தவறிவிட்டது**

சி. கலாரூபன் ஆகிய எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வங்கி அட்டை அடங்கிய பேஸ் திருநெல்வேலி ஆடியபாதம் வீதிக்கும்-தட்டாதெருச் சந்தி - ஆறுகால் மடத்துக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

( தகுந்த சன்மானம் வளங்கப்பபடும். ) (C-153)

**தொடர்பு : 077 602 0622**

**சிறுநீரகம் தேவை**

O,B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (3702)

**076 239 9874**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.